Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ


தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 3

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

20 ரபீவுஸ் ஸானி 1438 ஹிஜ்ரி கமரி    19 சுலஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

19 ஜனவரி 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நம்முடைய மஹ்திக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. வானமும் பூமியும் இறைவனால் உருவாக்கப்பட்டதிலிருந்து இறைவனால் நியமிக்கப்பட்ட வேறு ஒருவருக்கு மற்றும் வேறு ஓர் இறை தூதரின் காலத்தில் இந்த இரண்டு அடையாளங்களும் வெளிப்படவில்லை. அவற்றில் ஓர் அடையாளம் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு அதன் முதல் இரவில் கிரகணம் நிகழும். அதாவது, 13 ஆம் தேதி நிகழும். சூரிய கிரகணம் அதற்குரிய நாட்களில் மத்திய நாளில் நிகழும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இரண்டாவது அடையாளம் இதுவாகும். சஹீஹ் தாரே குத்னியில் இந்த ஒரு ஹதீஸ் இருக்கின்றது. அதாவது, இமாம் முஹம்மது பாசிர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

انّ لمھدینا اٰیتین لم تکونا منذ خلق السمٰوات والارض ینکسف
القمر لاوّل لیلۃٍ من رمضان وتنکسف الشمس فی النصف منہ

மொழியாக்கம்: அதாவது நம்முடைய மஹ்திக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. வானமும் பூமியும் இறைவனால் உருவாக்கப்பட்டதிலிருந்து இறைவனால் நியமிக்கப்பட்ட வேறு ஒருவருக்கு மற்றும் வேறு ஓர் இறை தூதரின் காலத்தில் இந்த இரண்டு அடையாளங்களும் வெளிப்படவில்லை. அவற்றில் ஓர் அடையாளம் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு அதன் முதல் இரவில் கிரகணம் நிகழும். அதாவது, 13 ஆம் தேதி நிகழும். சூரிய கிரகணம் அதற்குரிய நாட்களில் மத்திய நாளில் நிகழும். அதாவது, அதே ரமலான் மாதத்தின் 28 ஆம் தேதி அது நிகழும். உலகம் தோன்றிய நாள் முதல் எந்த ஒரு தூதர் மற்றும் நபியின் காலத்தில் ஒருபோதும் அவை வெளிப்படவில்லை. வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில்தான் இதுபோன்ற சந்திர சூரிய கிரகணங்கள் ரமலான் மாதத்தில் நிகழ்ந்தன. இது நிகழ்ந்து ஏறக்குறைய 12 வருடங்கள் கழிந்து விட்டன. இன்னொரு நபிமொழியில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று இந்த கிரகணம் இரு முறை ரமலானில் நிகழ்ந்துள்ளது. முதலாவதாக இந்த நாட்டிலும், இரண்டாவதாக அமெரிக்காவிலும் இந்த கிரகணங்கள் நிகழ்ந்தன. இரண்டு முறையும் இதே தேதிகளில்தான் அவை நிகழ்ந்துள்ளன. இந்த தேதிகள் பற்றி நபிமொழியில் சைகையாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இந்த கிரகணம் நிகழ்ந்த நேரத்தில் என்னை தவிர வாக்களிக்கப்பட்ட மஹ்தி என்று வாதிக்கின்ற எவரும் பூமியில் இருக்கவில்லை. அவ்வாறே வேறு எவரும் என்னைப் போன்று இந்த கிரகணத்தை, தான் மஹ்தியாக இருப்பதற்கான அடையாளமாகக் கூறி இது பற்றிய விபரத்தை உர்து, ஃபார்ஸி மற்றும் அரபி ஆகிய மொழிகளில் நூற்றுக்கணக்கான பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைகள் மூலம் அச்சிட்டு வெளியிட்டதில்லை. எனவே, இந்த விண்ணின் அடையாளம் எனக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான இரண்டாவது ஆதாரம் என்னவென்றால், இந்த அடையாளம் தோன்றுவதற்கு 12 வருடங்களுக்கு முன்னதாகவே இறைவன் இந்த அடையாளம் தொடர்பாக எனக்கு தெரிவித்திருந்தான். அதாவது, அத்தகைய அடையாளம் நிகழும் என்று கூறியிருந்தான். மேலும், அந்த செய்தி பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டு இந்த அடையாளம் தோன்றுவதற்கு முன்னதாகவே இலட்சக் -கணக்கான மக்களுக்கு அதைப் பற்றி விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், நமது எதிரிகள் முழுக்க முழுக்க காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த ஆட்சேபனையை செய்கின்றனர்.

முதலாவதாக, ஹதீஸில் சந்திரனுக்கு முதல் இரவில் கிரகணம் ஏற்படும் என்ற சொற்கள் உள்ளன. ஆனால், அவ்வாறு நிகழவில்லை என்பது அவர்களது ஆட்சேபனையாகும். ஏனென்றால், அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப சந்திரனுக்கு கிரகணம் ஹிலால் அதாவது, முதல் பிறை தோன்றும் இரவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவே சந்திர மாதத்தின் முதல் இரவாகும். மேலும் சூரியனுக்கு கிரகணம் சந்திர மாதத்தின் 15 -வது நாளில் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவே மாதத்தின் மத்திய நாளாக இருக்கின்றது என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால், முழுக்க முழுக்க இதைப் பற்றி புரியாமல் அவர்களுக்கு இந்த எண்ணம் வந்துள்ளது. ஏனென்றால், உலகம் தோன்றிய நாள் முதல் சந்திர கிரகணத்திற்காக மூன்று இரவுகளை இறைவன் தனது இயற்கைச் சட்டத்தில் நிர்ணயித்துள்ளான். அதாவது, அவை 13, 14 மற்றும் 15 -வது இரவுகள் ஆகும். மேலும், இறைவனின் இயற்கைச் சட்டத்திற்கு ஏற்ப சந்திர கிரகணத்திற்கான முதல் இரவானது சந்திர மாதத்தின் 13 -வது இரவாகும். சூரியனுக்கு கிரகணம் ஏற்படுவதற்கு மூன்று நாட்கள் இறைவனின் இயற்கைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது அவை சந்திர மாதத்தின் 27, 28 மற்றும் 29 -வது நாட்களாகும். மேலும் சூரியனுக்கு கிரகணம் ஏற்படும் அந்த மூன்று நாட்களில் சந்திர மாதத்தின் அடிப்படையில் 28 -வது நாள் மத்திய நாளாகும். எனவே ஹதீஸில் கூறப்பட்டிருப்பதற்கு முற்றிலும் பொருந்தும் வகையில் இதே தேதிகளில்தான் சந்திரனுக்கும் சூரியனுக்கும் ரமலான் மாதத்தில் கிரகணம் ஏற்பட்டது. அதாவது சந்திர கிரகணம் ரமலானின் 13 -வது இரவிலும் சூரிய கிரகணம் இதே ரமலானின் 28 -வது நாளிலும் நிகழ்ந்தன.

மேலும், அரபு மக்களின் சொற்றொடரில் முதல் இரவில் தோன்றும் சந்திரனுக்கு 'கமர்' என்ற சொல் ஒருபோதும் பயன்படுத்தப்பட்டதில்லை. மூன்று நாட்கள் வரை அதற்கு 'ஹிலால்' என்றே பெயர். சிலரது கருத்தின்படி ஏழு நாட்கள் வரை அது 'ஹிலால்' என்றே அழைக்கப்பட வேண்டும். இரண்டாவது ஆட்சேபனை இதுவாகும். சந்திரனின் முதல் இரவு என்பது 13 -வது இரவு என்றும், சூரியனுக்கு கிரகணம் ஏற்படும் நாட்களில் மத்திய நாள் என்பது 28 -வது நாள் என்றும் நாம் ஏற்றுக் கொண்டாலும் இதில் வழக்கத்திற்கு மாற்றமாக என்ன விஷயம் நடந்துள்ளது ? ரமலான் மாதத்தில் சந்திர கிரகணமும் சூரிய கிரகணமும் ஒருபோதும் நிகழவில்லையா ? என்பதே

(தொடர்ச்சி 7-வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

சில மக்கள் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும், பொறுப்பாளராக இல்லாதவர்களுக்கு எதிராகவும் அவர்கள் இப்படிப்பட்டவர்கள் அப்படிப்பட்டவர்கள் என்று புகார் கூறுகின்றனர். இவர் இந்த குற்றத்தை செய்துள்ளார். ஷரீஅத்திற்கு எதிரான இந்த செயலை செய்துள்ளார். எனவே அவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் இவர்கள் ஜமாஅத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர் என்றும் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு எழுதக் கூடியவர்களில் பெரும்பாலார் தங்களது புகார்களில் தங்களது பெயரை எழுதுவதில்லை அல்லது கற்பனையான ஒரு பெயரை அல்லது கற்பனையான ஒரு முகவரியை எழுதுகின்றனர். வெளிப்படையான விஷயம் என்னவென்றால் அத்தகைய மக்கள் கூறும் புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. எடுக்கப்படவும் முடியாது.

தமது பெயரை எழுதாமல் புகார் கூறுபவர்கள் அல்லது கற்பனையான பெயரை எழுதுபவர்கள் ஆகியோரிடம் காணப்படும் முதல் விஷயம் நயவஞ்சகமாகும் அல்லது அவர்களே பொய்யர்களாக இருக்கின்றனர். பொதுவாக மற்றவர்கள் மீது மோசமான குற்றச்சாட்டுகளை கூறுபவர்கள் அவர் பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது பொறுப்பாளராக இல்லாமல் இருந்தாலும் சரி. அவர் எந்த சமயத்தில் மற்றவர்கள் மீது இத்தகைய மோசமான குற்றச்சாட்டுகளை கூறுபவராக இருக்கின்றார் என்றால் அவரது சுய பயன்கள் மற்றவர்களால் பாதிக்கப்படும் போது அவர் அத்தகைய குற்றச்சாட்டுகளை கூறுகின்றார் என்பதனை பொதுவாக காண முடிகிறது. எனவே, விசாரனை நடத்துவதற்கு முன்னதாக புகார் கூறுபவர் எப்படிப்பட்டவர் என்பதை பார்க்க வேண்டியதிருக்கிறது.

இவ்வாறு தனது பெயரை எழுதாமல் புகார் கூறுகின்ற அனைவருக்கும் தெளிவாக இந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் தங்களை அடையாளங் காட்டிக் கொள்ளாமல் புகார் கூறுகின்ற இந்த செயல் திருக்குர்ஆனின் கட்டளைக்கு எதிரானதாகும். ஏனென்றால் திருக்குர்ஆன் முதலில் புகார் கூறுபவரைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. புகார் கூறுபவர் தனது பெயரையே தெரிவிக்காமல் இருந்தால் பிறகு விசாரணை எப்படி நடைபெறும்? மேலும் இந்த செயல் திருக்குர்ஆனின் கட்டளைக்கு முற்றிலும் எதிரானதாகும். இவ்வகையில் புகார் கூறுபவர் சுயமே திருக்குர்ஆனின் கட்டளையை மீறி நடக்கின்றார்.

ஒருவருக்கு தனது கருத்தின் மீதுள்ள ஆர்வத்தின் காரணமாகவோ அல்லது சமுதாயத்தின் தாக்கத்திற்கு ஆளாகியதன் காரணமாகவோ ஒரு விஷயம் தீயதாக தெரிய வந்தாலும் அது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறைக்கு ஏற்பவும் சரியானதாக இருந்தால் அதுவே சரியான செயலாகும். அது எவ்வகையிலும் குற்றமாகாது. சில மக்கள் தங்களது இயல்பின் காரணமாகவும் அல்லது சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களின் காரணமாகவும் சில விவகாரங்களில் கடுமையாக நடந்து கொள்கின்றனர். ஆனால் மார்க்கத்தின் பெயரில் அவர்கள் அந்த விஷயங்களைக் கூறினாலும் அதற்கு எந்த தகுதியும் இருப்பதில்லை.

சில விஷயங்கள் எத்தகையவை என்றால் அதற்காக சாட்சிகள் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும். சாட்சிகள் கொண்டு வரப்படவில்லை என்றால் அந்த விஷயத்திற்கு எந்த மதிப்பும் இருக்காது.

இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் கூறுகின்ற புகார் தொடர்பான தீர்ப்பு புகார் கூறுவோர் கூறுகின்ற விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்காது. புகார் மீதான தீர்ப்பு இறைவன் கூறியுள்ள வழிமுறைகளுக்கேற்பவே இருக்கும். எங்கு இரண்டு சாட்சிகள் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றதோ அங்கு இரண்டு சாட்சிகளை கொண்டு வர வேண்டும். எங்கு நான்கு சாட்சிகளை கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றதோ அங்கு நான்கு சாட்சிகளை கொண்டு வர வேண்டும். பிறகு அதற்கேற்ப விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பும் கூறப்படும். இறைவனது கட்டளைக்கேற்ப நமது விவகாரங்களையும் தீர்ப்புகளையும் அமைத்துக் கொள்வதில் தான் நமக்கு வெற்றி இருக்கின்றது. நமது சுய அகந்தையையும், சுய விளக்கங்களையும் அடிப்படையாக வைத்து ஜமாஅத் அமைப்பையும், காலத்தின் கலீஃபாவையும் அதற்கேற்ப செயல்படுமாறு வற்புறுத்தக் கூடியவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது. அதற்கேற்ப தீர்ப்பு கூறப்பட வேண்டும் என்றும் நீங்கள் கூறக்கூடாது.

கராச்சி மாவட்டத்திலுள்ள குல்ஸார் ஹிஜ்ரி ஹல்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஷேக் மஜீது அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ஷேக் சாஜிது மஹ்மூது சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். காதியானைச் சார்ந்த தர்வேஷான மதிப்பிற்குரிய ஷேக் அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் மகனான ஷேக் அப்துல் கதீர் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். காஷ்மீரிலுள்ள நாஸிராபாத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது லோன் சாஹிப் அவர்களும் ஷஹீதாகி விட்டார்கள். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**2 டிசம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **2 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

சில மக்கள் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும், பொறுப்பாளராக இல்லாதவர்களுக்கு எதிராகவும் அவர்கள் இப்படிப்பட்டவர்கள் அப்படிப்பட்டவர்கள் என்று புகார் கூறுகின்றனர். இவர் இந்த குற்றத்தை செய்துள்ளார். ஷரீஅத்திற்கு எதிரான இந்த செயலை செய்துள்ளார். எனவே அவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் இவர்கள் ஜமாஅத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர் என்றும் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு எழுதக் கூடியவர்களில் பெரும்பாலார் தங்களது புகார்களில் தங்களது பெயரை எழுதுவதில்லை. அல்லது கற்பனையான ஒரு பெயரை அல்லது கற்பனையான ஒரு முகவரியை எழுதுகின்றனர். வெளிப்படையான விஷயம் என்னவென்றால் அத்தகைய மக்கள் கூறும் புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. எடுக்கப்படவும் முடியாது. சிறிது காலம் கழிந்த பிறகு நான் புகார் எழுதியிருந்தேன். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மீண்டும் புகார்கள் வருகின்றன. நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தால் மிகப்பெரும் அநீதி இழைக்கப்பட்டு விடும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு பெயர் கூறாமல் புகார் கூறுகின்ற இந்த நோய் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலுள்ள மக்களிடம் அதிகமாக இருக்கின்றது. உலகிலுள்ள ஏனைய நாடுகளிலுள்ள உள்ளூர் வாசிகளிடமிருந்து மிக அரிதாகவே இப்படிப்பட்ட புகார்கள் வருகின்றன. ஆனால் பாகிஸ்தானிகள் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலரிடமும் கூட இந்த நோய் இருக்கின்றது. அதாவது இவ்வாறு பெயர் கூறாமல் புகார் எழுதுகின்ற பழக்கம் அவர்களிடம் இருக்கின்றது. இதுவொரு புதிய விஷயமல்ல. எல்லா காலகட்டத்திலும் இத்தகைய மக்கள் இருந்திருக்கின்றனர். அவர்கள் இதுபோன்ற புகார்களை கூறக் கூடியவர்களாக இருந்திருக்கின்றனர். அவ்வாறே இன்றைய நாட்களிலும் சில மக்கள் எனக்கு எழுதுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலகட்டத்திலும், மூன்றாவது கிலாஃபத்தின் காலகட்டத்திலும், நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்திலும் இவ்வாறு எழுதுபவர்கள் இருந்து வந்தனர். பெயரை எழுதாமலேயே அவர்கள் புகார் கூறி வந்தனர். இப்படிப்பட்ட புகார் வந்த சமயத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக ஒரு குத்பா கொடுத்தார்கள். இந்த குத்பா இத்தகைய மக்களின் வாயை அடைப்பதற்கு போதுமானதாகவும், சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் இருப்பதால் அதிலிருந்தும் பயன் பெற்றவாறு இன்று அதிலுள்ள சில விஷயங்களை உங்களுக்கு கூற வேண்டும் என்று நான் நினைத்தேன். தமது பெயரை எழுதாமல் புகார் கூறுபவர்கள் அல்லது கற்பனையான பெயரை எழுதுபவர்கள் ஆகியோரிடம் காணப்படும் முதல் விஷயம் நயவஞ்சகமாகும். அல்லது அவர்களே பொய்யர்களாக இருக்கின்றனர். அவர்களிடம் உண்மையும், தைரியமும் இருந்தால் அவர்கள் எதைப் பற்றியும் பொருட்படுத்தாதவர்களாக இருந்திருப்பார்கள். நாங்கள் உயிர், பொருள், கவுரவம், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்வதற்கு எல்லா நேரமும் தயாராக இருக்கின்றோம் என்று அவர்கள் உறுதிமொழி கூறுகின்றனர்.

ஆனால், அவர்களின் கருத்தின்படி இந்த விவகாரம் ஜமாஅத்தின் கண்ணியம் மற்றும் பெருமைக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் போது அவர்கள் தங்களது பெயரை மறைக்கின்றனர். அதன் காரணமாக அவர்களது கண்ணியத்திற்கும், பெருமைக்கும் எந்தவொரு இழப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்று அவர்கள் நினைக்கின்றனர். எனவே எவர் ஆரம்பத்திலேயே தனது பலவீனத்தை வெளிப்படுத்திக்காட்டி விட்டாரோ அவர் கூறும் ஏனைய விஷயங்கள் கூட தவறாக இருப்பதற்கு அதிக சாத்தியக்கூறு இருக்கிறது. திருக்குர்ஆனில் அல்லாஹ் உங்களிடம் எந்தவொரு செய்தி கூறப்பட்டாலும் அது பற்றி விசாரணை செய்து கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். இந்த விஷயம் அறிவுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். எந்தவொரு விசாரணைக்கும் அந்த செய்தியை கூறுபவர் அல்லது அந்த செய்தியை எட்ட வைப்பவரின் கூற்றை கேட்ட பிறகு உடனடியாக அவர் கூறும் விஷயம் தொடர்பாக விசாரணை நடத்த முடியாது. அவ்வாறு விசாரணையும் நடைபெறுவதில்லை. மாறாக, இந்த செய்தியை எட்ட வைக்கக்கூடிய இந்த நபர் எப்படிப்பட்டவர் என்பது முதலில் பார்க்கப்படுகின்றது. அதிலிருந்தே விசாரணை ஆரம்பிக்கப்படுகின்றது. முதலாவதாக, அந்த நபர் தொடர்பான விசாரணை நடைபெறும்.

அதாவது, அந்த நபர் எல்லா விதமான தீமைகளிலிருந்தும் விலகி தூயவராக இருக்கின்றாரா? சுயமே அவர் ஏதாவது தீமையை செய்பவராக இருக்கின்றாரா? அவர் தனது ஈமானில் பலவீனமானவரா? என்பது பார்க்கப்படும். அவர் சுயமே ஈமானில் பலவீனமானவராக இருந்து மற்றவர்கள் மீது குற்றங்களை சுமத்தக் கூடியவராக இருக்கக்கூடாது. மற்றவர்களைப் பற்றி இவர் இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர் என்று அவர் கூறக்கூடாது. பொதுவாக மற்றவர்கள் மீது மோசமான குற்றச்சாட்டுகளை கூறுபவர்கள் அவர் பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது பொறுப்பாளராக இல்லாமல் இருந்தாலும் சரி. அவர் எந்த சமயத்தில் மற்றவர்கள் மீது இத்தகைய மோசமான குற்றச்சாட்டுகளை கூறுபவராக இருக்கின்றார் என்றால் அவரது சுய பயன்கள் மற்றவர்களால் பாதிக்கப்படும் போது அவர் அத்தகைய குற்றச்சாட்டுகளை கூறுகின்றார். என்பதனை பொதுவாக காண முடிகிறது.

எனவே, விசாரணை நடத்துவதற்கு முன்னதாக புகார் கூறுபவர் எப்படிப்பட்டவர் என்பதை பார்க்க வேண்டியதிருக்கிறது. அவர் நம்பிக்கை கொண்டவரா? அல்லது குழப்பவாதியா? என்பதைப் பார்க்க வேண்டும். புகார் கூறுபவர் யார்? என்பதே தெரியாத போது அவர் எந்த வரிசையின் கீழ் வருகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியாது. எனினும், ஜமாஅத்திற்கு ஏற்படும் பயன்களுக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு விஷயத்தை எழுதுபவர் எழுதுகின்றார் என்றால் பிறகு நாம் நம் அளவில் அதைப் பற்றி விசாரணை செய்து கொள்வோம். இவ்வாறே, புகார் கூறியவர் யார்? என்பது தெரிய வந்து விட்டால் முதலில் நான் ஏற்கனவே கூறியது போன்று அவரது நல்லொழுக்கம் தொடர்பாக முதலில் விசாரணை நடைபெறும். இவ்வாறே நமது அளவில் அவர் என்ன விஷயம் கூறி இருந்தாரோ அது உண்மையா? என்பது பற்றிய விசாரணையும் நடைபெறும். அதன் மூலம் அவர் உண்மையை கூறியுள்ளாரா? இல்லையா? என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது தொடர்பான திருக்குர்ஆனின் போதனை இதுவாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். நம்பிக்கை கொண்டவர்களே! நேர்மையற்ற ஒருவன் ஏதேனும் செய்தியினை உங்களிடம் கொண்டு வந்தால் அதனைக் குறித்து தீர விசாரணை செய்து கொள்ளுங்கள். **(49:7)**

ஒரு குழப்பவாதி உங்களிடம் ஏதாவதொரு செய்தியை கொண்டு வந்தால் அல்லது ஒருவர் தொடர்பாக தீய விஷயங்களைக் கூறினால் அதுபற்றி நீங்கள் நன்றாக விசாரணை செய்து கொள்ளுங்கள். பிறகு அது தொடர்பாக நடவடிக்கை எடுங்கள். ஆனால் புகார் கூறுபவர்கள் தங்களது பெயரை கூறாமல் ஒருபுறம் அவர்கள் குற்றவாளியாக ஆகிவிடுகின்றனர். மறுபுறம் அவர்கள் எந்த விஷயத்தை எழுதியுள்ளார்களோ அதனை அவர்கள் எழுதியது போன்றே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் எவர்களுக்கு எதிராக புகார் கூறப்பட்டிருக்கின்றதோ அவருக்கு தண்டனை கொடுப்பதற்கான கட்டளையும் உடனடியாக பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஃபாஸிக் என்பதற்கு தீய செயலை செய்பவர் என்பது மட்டும் பொருளல்ல. தீய செயலைச் செய்பவருக்கு அரபியில் ஃபாஸிக் என்று கூறப்படுகிறது என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அகராதி அடிப்படையில் இயல்பில் மிகவும் வேகம் உடையவருக்கும் ஃபாஸிக் என்று கூறப்படுகிறது. அற்ப விஷயங்களுக்காக அடிக்கடி சண்டை போடுபவருக்கும் இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. கட்டுப்படாமல் இருப்பதற்கும் ஃபிஸ்க் என்று கூறப்படுகிறது. கட்டுப்படுவதில் இருந்தும் வெளியேறி விட்டவர் ஃபாஸிக் ஆவார்.

ஃபாஸிக் என்பதன் ஒரு பொருள் ஒத்துழைப்பு கொடுக்காமல் இருப்பவர் என்பதும் ஆகும். அவர் சண்டை போடுபவராகவும், ஒத்துழைப்பு கொடுக்காதவர் ஆகவும் இருக்கின்றார். மக்களின் சிறு சிறு குறைகளை மிகவும் பெரிதாக எடுத்துக் காட்டுபவரும் ஃபாஸிக் ஆக இருக்கின்றார். பிறகு தான் கூறியதற்கேற்ப மற்றவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அவர் கருதுகின்றார். மன்னிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை என்று அவர் கருதுகின்றார். இயல்பில் ஒரு வேகம் உடையவரையும் ஃபாஸிக் என்று அழைக்கின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கலப்பற்ற, பழைய அஹ்மதி சகோதரர் ஒருவரைப் பற்றி ஒருமுறை இவ்வாறு கூறுகின்றார்கள்: அவர் கலப்பற்ற தன்மையை கொண்டவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் ஒரு சிறிய விஷயத்திற்கு கூட மிகப் பெரிய ஃபத்வாவை கொடுக்கக்கூடிய பழக்கம் அவரிடம் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சிறு சிறு விஷயங்களை சுட்டிக் காட்டி அதற்காக பிறரை காஃபிராக்கி விடுகின்ற நோய் அவரிடம் இருந்தது. ஏதாவதொரு விஷயத்தை குறையாக கண்டு விட்டால் உடனடியாக அந்த நபர் மீது அவர் குஃப்ர் ஃபத்வா கொடுத்து விடுவார். உதாரணமாக, அத்தஹிய்யாத்தில் அமருகின்ற போது வலது காலிலுள்ள விரல்களை நேராக வைக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. அவரது பார்வையில் எவர் தமது விரல்களை நேராக வைக்கவில்லையோ அவர் காஃபிராகி விடுகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அத்தஹிய்யாத்தில் நான் அமர்கின்ற போது எனக்கு இருந்த கீழ்வாதம் நோயின் காரணமாக என்னால் என் வலது கால் விரல்களை நேராக வைக்க முடியாமல் இருந்தது. ஆனால் எனது விரல்கள் சரியாக இருந்த சமயத்தில் நான் அவற்றை நேராகவே வைத்திருந்தேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹாஃபிழ் சாஹிப் அவர்கள் (இவர் ஹாஃபிழாக இருந்தார்) உயிரோடு இருந்திருந்தால் அன்றைய மாலை நேரத்தில் எனக்கு எதிராகவும் அவர் குஃப்ர் ஃபத்வா கொடுத்திருப்பார்.

ஆக, இப்படிப்பட்ட நபர்களும் இருக்கின்றனர். அதாவது இவர்கள் தமது கால் விரல்களை நேராக வைக்கவில்லை. அவ்வாறு செய்வது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கு மாற்றமான செயலாகும். இதன் மூலம் அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின் மீது ஈமான் இல்லை என்பது தெரிய வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சுன்னத்தின் மீது அவருக்கு ஈமான் இல்லை என்றால் திருக்குர்ஆன் மீதும் அவருக்கு ஈமான் இல்லை. திருக்குர்ஆன் மீது அவருக்கு ஈமான் இல்லை என்றால் அவருக்கு அல்லாஹ்வின் மீதும் ஈமான் இல்லை. இவ்வாறு அவர் காஃபிராக விடுகின்றார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு அவசரமாக செயல்படுபவர் பற்றிய உதாரணத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கலப்பற்ற தன்மையை கொண்டவர்களாக இருந்தாலும் சரியே. ஆனால் எவர் தனது பெயரையும் மறைத்து வைத்தவாறு சுயமே தனது ஈமானிலும் பலவீனமானவராக இருக்கின்றாரோ அத்தகையவர் மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றபோது ஃபாஸிக் என்ற சொல்லுக்கு கூறப்படுகின்ற அனைத்து பொருள்களின் அடிப்படையிலும் நிச்சயமாக அவர் ஃபாஸிக் ஆக இருக்கின்றார். எனவே இவ்வாறு தனது பெயரை எழுதாமல் புகார் கூறுகின்ற அனைவருக்கும் தெளிவாக இந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் தங்களை அடையாளங் காட்டிக் கொள்ளாமல் புகார் கூறுகின்ற இந்த செயல் திருக்குர்ஆனின் கட்டளைக்கு எதிரானதாகும். ஏனென்றால் திருக்குர்ஆன் முதலில் புகார் கூறுபவரைப் பற்றி விசாரனை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. எவ்வித விசாரனையும் இல்லாமல் புகார் கூறுபவரின் கூற்றிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்தால் மேலும் அவரது

கோரிக்கைக்கு ஏற்ப செயல்படுவதாக இருந்தால் ஜமாஅத் முன்னேற்றத்தின் பக்கம் செல்வதற்கு பகரமாக வீழ்ச்சியின் பக்கம் சென்று விடும். வீழ்ச்சிக்கு இரையாகி விடும். காலத்தின் கலீஃபாவும், ஜமாஅத் அமைப்பும் தாமாக எந்த விசாரணையும் செய்யக்கூடாது. ஒருவர் கூறுவதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் பிறகு இவ்விஷயம் நம்மை முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்லாது. ஒவ்வொருவரும் எழுந்து எனது விருப்பத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றே கூறுவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: புகார் கூறக்கூடியவர் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்பவர். நேர்மையானவர். கலப்பற்ற தன்மையை கொண்டவர் என்பதை நாம் அறிந்தருந்தாலும் கூட அவர் ஒருவரைப் பற்றி புகார் கூறும் போது அவரைப் பற்றி எல்லாம் தெரிந்திருந்தும் கூட கண்டிப்பாக அவர் கூறும் விஷயம் தொடர்பாக விசாரணை நடைபெறும்.

புகார் கூறுபவர் நல்லவர். நேர்மையானவர். கலப்பற்ற தன்மையை கொண்டவர் என்ற உறுதி நமக்கு ஏற்பட்டாலும் கூட அவர் தவறு செய்ய மாட்டார் என்று நமக்கு தெரிந்தாலும் கூட அந்த விவகாரம் தொடர்பாகவும், புகார் கூறிய அந்த நபர் தொடர்பாகவும் விசாரனை நடைபெறும். ஏனென்றால் எந்தவொரு தனி நபரும் நான் இதனை கூறுவதால் அதனை இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப தான் தீர்ப்பு கூறப்பட வேண்டும் என்று கூற முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை தொழுகையில் இமாமத்திற்கு நின்றார்கள். தொழுகையின் போது ஒரு தவறு நிகழ்ந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பின்னால் நின்று தொழக் கூடியவர்களில் ஒருவராக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதும் போது ஏற்பட்ட தவறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் திருத்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை விரும்பவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் இதனை திருத்தும்படி யார் உங்களிடம் கூறினார்கள்? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த விருப்பமின்மைக்கான காரணம் உங்களிடம் வேறு பல பெரிய பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற சிறு சிறு பணிகளை செய்வதை மற்றவர்களுக்காக விட்டு விடுங்கள் என்ற கருத்தில் அவர்கள் இவ்வாறு கூறியிருக்கலாம். அல்லது இதனை செய்வது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து திருக்குர்ஆனைக் கற்றுக் கொண்ட அந்த காரிகளின் வேலையாகும் என்ற கருத்திலும் அன்னார் இவ்வாறு கூறியிருக்கலாம். எனவே இந்த பணியை அவர்கள் செய்யுமாறு விட்டு விட வேண்டும் என்றே பெருமானார் (ஸல்) அவர்கள் கருதியிருப்பார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது பெயரை எழுதாமல் தன்னிடம் புகார் கூறிய ஒரு நபரைப் பற்றி கூறுகின்றார்கள்: புகார் கூறியவர் ஒரு பெரிய நபராகக் கூட இருக்கலாம். அவரைப் பற்றி தெரிந்திருந்தால் இந்த விஷயங்களை மற்றவர்களிடம் விட்டு விடுங்கள் என்று அவரிடம் நான் கூறியிருப்பேன். உங்களது அசல் பணியின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்றும் கூறியிருப்பேன். புகார் எழுதியவர் தனது பெயரை வெளிப்படுத்தவில்லை. அதனால் அவரது தகுதி பற்றியும், நிலைமை பற்றியும் நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக அவருக்கு நம்மால் புரிய வைக்கவும் முடியாது. இரண்டாவதாக, இந்த நபர் பொறுப்பாளர்கள் மீதும், நாஸிர்மார்கள் மீதும், லஜ்னாக்கள் மீதும் கூட பல தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளார். இந்த இந்த நபரிடம் இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்று கூறியிருந்தார். ஒருபுறம் அவர்களைப் பற்றி இவர் புகார் கூறுகின்றார். அதாவது அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைக்கு எதிராக செயல்படுகின்றார்கள் என்று கூறுகின்றார். ஏனென்றால், திருக்குர்ஆனுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைக்கும் மாற்றமாக செயல்படுவது தான் மிகப்பெரிய குற்றமாகும். எனவே இவ்வகையில் இந்த மக்களிடம் பெரிய குறை இருக்கின்றது என்று அவர் கூறுகின்றார்.

ஒரு முஸ்லிம் திருக்குர்ஆனுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனைக்கும் எதிராக செயல்படாமல் இருந்தால் அது குற்றமல்ல. ஆனால் இந்த போதனைக்கு எதிராக செயல்பட்டால் அது குற்றமாகும். எந்நிலையிலும் புகார் கூறுகின்றவர் ஒருபுறம் இந்த மக்கள் திருக்குர்ஆனுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனைக்கும் எதிராக செயல்படுகின்றனர் என்று கூறுகின்றார். மறுபுறம் புகார் கூறுபவரே இந்த போதனைகளுக்கு எதிராக செயல்படுகின்றார். அவர் புகார் கூறுவதற்கும் அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கும் எந்த நிபந்தனைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை மீறி செயல்படுகின்றார். பெரும்பாலும் மக்கள் இதைத் தான் செய்கின்றனர்.

எனக்கு எழுதும் போது கூட அந்த நிபந்தனைகளை அவர்கள் முறிக்கின்றனர். அசல் விஷயம் திருக்குர்ஆனின் கட்டளைகள் மற்றும் சுன்னத்திற்கேற்ப செயல்படுவதில் தான் இருக்கின்றது. தெளிவாக நாம் ஒரு விஷயத்தைக் கூறும் போது அதற்கான ஆதாரத்தையும் தெரிவிக்க வேண்டும். அத்துடன் அது பற்றி விசாரணையும் நடத்தப்பட வேண்டும் என்றே திருக்குர்ஆன் கூறுகிறது. ஆனால், புகார் கூறுபவர் தனது பெயரையே தெரிவிக்காமல் இருந்தால் பிறகு விசாரணை எப்படி நடைபெறும்? மேலும் இந்த செயல் திருக்குர்ஆனின் கட்டளைக்கு முற்றிலும் எதிரானதாகும். இவ்வகையில் புகார் கூறுபவர் சுயமே திருக்குர்ஆனின் கட்டளையை மீறி நடக்கின்றார். திருக்குர்ஆன் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கேற்ப செயல்படுவதே நன்மையாகும். இதனை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவருக்கு தனது கருத்தின் மீதுள்ள ஆர்வத்தின் காரணமாகவோ அல்லது சமுதாயத்தின் தாக்கத்திற்கு ஆளாகியதன் காரணமாகவோ ஒரு விஷயம் தீயதாக தெரிய வந்தாலும் அது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறைக்கு ஏற்பவும் சரியானதாக இருந்தால் அதுவே சரியான செயலாகும். அது எவ்வகையிலும் குற்றமாகாது.

சில மக்கள் தங்களது இயல்பின் காரணமாகவும் அல்லது சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களின் காரணமாகவும் சில விவகாரங்களில் கடுமையாக நடந்து கொள்கின்றனர். ஆனால் மார்க்கத்தின் பெயரில் அவர்கள் அந்த விஷயங்களைக் கூறினாலும் அதற்கு எந்த தகுதியும் இருப்பதில்லை. இந்த விஷயத்தை விளக்குவதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகின்றார்கள். இதற்கு முன்னரும் இந்த சம்பவத்தை பலமுறை விளக்காக எடுத்துக் கூறியுள்ளேன். இப்போது இந்த விஷயத்திற்கு இச்சம்பவத்தை மீண்டும் எடுத்துக் கூறுகின்றேன்.

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்களுடன் ரயில் நிலையத்தில் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். இந்த நாட்களில் பர்தா பற்றிய கருத்து மிகவும் கடுமையாக பார்க்கப்பட்டு வந்தது. அந்த காலத்தில் பர்தா மிகவும் கடுமையாக பேணப்பட்டு வந்தது. ரயில் நிலையத்திற்கு பல்லக்கிற்குள் அமர்ந்தவாறு பெண்கள் கொண்டு வரப்பட்டார்கள். பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இவ்வாறு பல்லக்கிற்குள் அமர்ந்து ரயில் நிலையத்திற்கு வந்தனர். அவர்களின் வலது புறமும், இடது புறமும் போர்வை தொங்க விடப்பட்டு இருந்தது. இவ்வாறு ரயிலின் பெட்டிகள் வரை மூடப்பட்ட நிலையிலேயே அந்த பெண்கள் கொண்டு வரப்பட்டனர். பிறகு அந்நிலையிலேயே அவர்கள் ரயில் பெட்டிக்குள் புகுந்து விடுவர். ரயிலுக்குள் அமர்ந்த பிறகு ஜன்னல் கதவுகளை அடைத்து விடுவர். வேறு எவரது பார்வையும் அவர்கள் மீது பட்டு விடக்கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த பர்தா அவர்களுக்கு துன்பத்தை தரக்கூடியதாக இருந்தது. அது இஸ்லாத்தின் போதனைக்கு மாற்றமாகவும் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் போதனைக்கேற்ப செயல்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் புர்கா அணிந்து கொள்வார்கள். உலாவுவதற்காக வெளியிலும் சென்று வருவார்கள். குறிப்பிட்ட அந்த நாட்களிலும் கூட ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்கள் புர்கா அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு ரயில் நிலையத்தில் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னாருடன் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களும், ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் இருந்தார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் இயல்பில் ஒரு வேகம் இருந்தது. தவறான விஷயம் நடக்கின்றது என்று அவர்கள் கருதினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் தானே சென்று இதைப் பற்றி கூறுவதற்கான தைரியம் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் சென்று, மவ்லவி சாஹிப்! இது என்ன நடக்கின்றது? நாளை பத்திரிகைகளில் இது பற்றிய கூச்சல் எழுந்து விடும். இது தொடர்பாக பிரசுரங்கள் வெளியிடப்படும். அதாவது மிர்ஸா சாஹிப் அவர்கள் நடைபாதையில் தனது மனைவியுடன் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டிருந்தார் என்று செய்தி வெளிவரும். எனவே நீங்கள் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதைப் பற்றி புரிய வையுங்கள் என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், இதில் என்ன தீமை இருக்கின்றது? எனக்கு இதில் எந்த தீமையும் தென்படவில்லை. உங்களுக்கு ஏதாவது தீமை தென்படுகின்றது என்றால் நீங்கள் சுயமே சென்று ஹுஸூர் (அலை) அவர்களிடம் இது பற்றி கூறுங்கள் என்று கூறினார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ மிக தொலைவில் சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் திரும்பி வந்த போது அன்னாரது கழுத்து குனிந்திருந்தது.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹுஸூர் (அலை) அவர்கள் என்ன பதில் கூறினார்கள்? என்பதை அறிய எனக்கு

ஆவல் ஏற்பட்டது. எனவே நான் மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன பதில் கூறினார்கள்? என்று கேட்டேன். மவ்லவி சாஹிப் அவர்கள், நான் ஹுஸூர் (அலை) அவர்களிடம், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? மக்கள் இதைப் பற்றி என்ன கூறுவார்கள்? என்று கேட்டேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் இறுதியில் மக்கள் என்ன தான் கூறுவார்கள்? மிர்ஸா சாஹிப் தனது மனைவியை அழைத்துக் கொண்டு உலாவுகின்றார் என்று தானே கூறுவார்கள்? என்று கூறினார்கள். இதைக் கேட்ட மவ்லவி சாஹிப் அவர்கள் வெட்கமடைந்து திரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்கள் பர்தா அணிந்திருந்தார்கள். மேலும் கணவனும், மனைவியும் ஒன்றாக செல்வது என்பது ஆட்சேபணைக்குரியதாக ஒரு விஷயமும் அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட தனது மனைவிமார்களுடன் இவ்வாறு நடந்து கொண்டார்கள். ஒரு முறை மக்களுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் ஓடினார்கள். முதல் தடவை பெருமானார் (ஸல்) அவர்கள் ஓட்டப் பந்தயத்தில் பின்தங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வெற்றி பெற்றார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு மீண்டும் அவ்வாறே அவர்கள் ஓடினார்கள். இந்த முறை பெருமானார் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்றார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தோல்வியடைந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து தில்க பி தில்க அதாவது ஆயிஷாவே ! அன்று நான் தோற்றதற்கு பகரமாக இன்று நீ தோற்று விட்டாய் என்று கூறினார்கள்.

எனவே, தனது மனைவிமார்களுடன் உலாவுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குறையாக கருதவில்லை. மேலும் எந்த விஷயத்திற்கான அனுமதியை இஸ்லாம் வழங்கியுள்ளதோ அதனை குறை என்று நாம் கூற முடியாது. எனவே ஒருவர் மற்றவர் மீது ஆட்சேபணை செய்கின்றார் என்றால் அவரது பார்வையில் ஆட்சேபனை செய்யப்படுபவர் இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராக செயல்படுகின்றார்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் புகார் கூறுபவர் தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்: பிறகு அவர் தமது கடிதத்தில் இவர் மிகவும் குறைந்த தகுதியை உடையவராவார் என்று எழுதியுள்ளார். தொடர்ந்து அந்த நபர் மீது குடும்ப ரீதியாகவும், அவரது சொந்த விஷயங்கள் தொடர்பாகவும் அவர் பல ஆட்சேபணைகளை கூற ஆரம்பித்தார். இந்த நபர் மிகவும் மோசமானவர். இவருக்கு நீங்கள் இந்த பொறுப்பை கொடுத்துள்ளீர்கள் என்று எழுதியிருந்தார். மேலும் எத்தகைய சில குற்றங்களை மற்றவர் மீது அவர் சுமத்தியிருந்தார் என்றால் அத்தகைய சில விஷயங்களில் ஷரீஅத் சாட்சிகளை கோரி இருக்கின்றது. சாட்சியம் கூட நேரடியாக கண்ணால் கண்ட சாட்சியை அது கேட்கின்றது. அதாவது நேரடியாக கண்ணால் கண்ட நான்கு பேர்களின் சாட்சிகள் இருந்தால் தான் புகார் கூறுபவர் உண்மையில் உண்மையை கூறுகின்றார். இல்லையென்றால் அவர் கூறுவது பொய்யாகும்.

சிலர் மற்றவர்கள் மீது அவர்கள் தகாத தொடர்புகளை வைத்திருப்பதாக குற்றம் சுமத்துகின்றனர். ஒரு பையனுக்கும் பெண்ணுக்கும் இடையில் இத்தகைய தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தால் இஸ்லாத்தில் அதற்காக நான்கு சாட்சிகள் கொண்டு வரப்பட வேண்டும் என்பது அவசியமானதாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால் எவர் சுயமே திருக்குர்ஆனின் போதனைக்கு மாற்றமாக செயல்படுகின்றாரோ அவருக்குத் தான் மார்க்கத்தைப் பற்றிய தன்மான உணர்வும் ஏற்பட்டிக்கின்றது. அவர் மற்றவர்கள் மீது எத்தகைய குற்றச் சாட்டுகளை சுமத்துகின்றார் என்றால் அவ்வாறு செய்வதை திருக்குர்ஆன் தடை செய்துள்ளது. திருக்குர்ஆன் இதனை தடை மட்டும் செய்யவில்லை. மாறாக, அவ்வாறு பழி சுமத்துபவருக்கு தண்டனையும் தரப்பட வேண்டும் என்று அது கூறுகின்றது. இவ்வாறு ஒருவர் மீது தவறான குற்றச் சாட்டுகளை சுமத்துபவருக்கு 80 கசையடிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று அது கூறுகின்றது. எனவே ஷரீஅத் இது தொடர்பாக இவ்வளவு கடுமையான கட்டளையை பிறப்பித்திருக்கும் போது அதை இவர் முறித்து விட்டு இந்த நபர் திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக செயல்படுகின்றார் என்று கூறுகின்றார். ஆனால் உண்மையில் சுயமே அவர் தான் திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக செயல்படுகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! புகார் கூறுபவரின் நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கின்றது. முதலாவது விஷயம் புகார் கூறுபவர் முதலில் தமது பெயரை வெளிப்படுத்திக் கூறவில்லை. பிறகு தேவையான ஆதாரங்களை அவர் சமர்ப்பிக்கவில்லை. ஷரீஅத் விதித்துள்ள விதிமுறைகளிலிருந்தும் நானும் சுதந்திரமானவன் அல்ல. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் சுதந்திரமானவர்கள் அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஷரீஅத்தின் விதிமுறைக்கேற்ப செயல்படும் கட்டாயத்தில் இருந்தார்கள். ஆனால் இந்த நபரோ எத்தகைய ஆட்சேபணைகளை செய்துள்ளார் என்றால் அதனை செய்பவர் மீது ஷரீஅத் சில தண்டனைகளை விதித்திருக்கின்றது. பிறகு ஷரீஅத் இதற்காக சாட்சிகளை கொண்டு வருவதற்கான என்ன வழிமுறைகளை நிர்ணயித்திருக்கின்றதோ அந்த வழிமுறைகளுக்கேற்ப நடப்பது அவசியமானதாகும். ஆனால் இந்த நபரோ இவர் திருக்குர்ஆனின் இந்த கட்டளையை முறித்து விட்டார். அவருக்கு தண்டனை கொடுங்கள். ஆனால் என்னைப் பற்றி எதுவும் கூறாதீர்கள் என்று கூறுகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சிறு வயதில் நான் கேள்விப்பட்ட நகைச்சுவை ஒன்று எனது நினைவில் வந்தது. அந்த நகைச்சுவையை கேட்டு அந்த சமயத்தில் நான் மிகவும் ரசித்தேன். இப்போது அது எனக்கு நினைவில் வந்தாலும் கூட சிரிப்பு வருகின்றது. நான் ஐந்தாவது அல்லது ஆறாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது நமது ஆசிரியர் ஒருவர் இத்தகைய ஒரு வழிமுறையை நிர்ணயித்திருந்தார். அதாவது அவர் கேட்கும் கேள்விக்கு மாணவர் அதற்கென்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நேரத்திற்குள் பதில் கூறி விட்டால் அவர் எல்லாரையும் விட முதலாவது இடத்தில் இருப்பவராக கருதப்படுவார். நாங்கள் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆசிரியர் எங்களிடம் கேள்வி கேட்டார். ஒரு மாணவர் கேள்விக்கான பதிலை கூறினார். இன்னொரு மாணவர் தனது கையை நீட்டியவாறு, ஆசிரிரே! இந்த பதில் தவறாகும் என்று கூறினார். அப்போது ஆசிரியர் முதலாவது பதில் கூறியவரைப் பார்த்து நீங்கள் மேலே இருந்து கீழே இறங்கி வந்து விடுங்கள் என்று கூறிவிட்டு இந்த மாணவரை நீங்கள் கீழே இருந்து மேலே சென்று நில்லுங்கள் என்று கூறினார்.

ஆனால் முதலாவது இடத்திலிருந்த அந்த மாணவர் கீழே இறங்கி வந்ததுமே ஆசிரியரைப் பார்த்து, ஆசிரியரே! இவன் எனது தவறை சுட்டிக் காட்டியவாறு தவறான சொல்லை தவறாக கூறியுள்ளார். அது தவறாகும் என்று கூறினார். இதைக் கேட்ட ஆசிரியர் இவ்வாறு பதில் கூறிய மாணவரை மீண்டும் மேலே நிற்கச் செய்து ஏற்கனவே மேலே நின்ற மாணவரை கீழே நிற்கும்படி கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆட்சேபணை செய்பவர்களில் சிலரது நிலைமையும் இவ்வாறே இருக்கின்றது. அவர்கள் மற்றவர்கள் மீது தவறான அல்லது சரியான ஆட்சேபணைகளை செய்கின்றனர். ஆனால் ஆட்சேபணை செய்யக்கூடிய வழிமுறைகள் குற்றம் புரிகின்ற வகையில் இருக்கின்றது. இவ்வாறு தான் எவர் மீது புகார் கூறுகின்றாரோ அவருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற முயற்சியில் இறுதியில் இவரே தண்டனைக்குரியவராக ஆகி விடுகின்றார். பிறகு குற்றவாளிகளை எவருமே பிடிப்பதில்லை என்று கூச்சலிட ஆரம்பிக்கின்றனர். அதைப்பற்றி கவனமூட்டுபவர் –களுக்கு தண்டனை வழங்குகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் தண்டனை வழங்கக் கூடியவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்களும் கூட ஷரீஅத்தின் அடிமைகளாக இருக்கின்றனர். எனவே நீங்கள் திருக்குர்ஆனின் ஆட்சியை நிலைநாட்ட விரும்பினால் உங்கள் மீதும் இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுங்கள். மற்றவர்கள் மீது இறைவனின் ஆட்சி நிலைபெற வேண்டும். ஆனால் என்மீது இறைவனின் ஆட்சி நிலைபெறக் கூடாது என்று நீங்கள் விரும்புவதாக இருந்தால் இது சரியான விஷயமல்ல. எனவே நான் புகார் கூறுபவர்களிடம் சுயமே நீங்களே உங்களது தகுதியை அடையாளங்கண்டு கொள்ளுங்கள் என்று கூறிக் கொள்கின்றேன்.

பெயரை மறைக்கக் கூடியவர்கள் தமது பெயரை மறைத்து விட்டு மற்றவர்கள் மீது குற்றங்களை சுமத்துகின்றனர். அவர்கள் சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் கூறும் ஆதாரங்கள் என்னவென்றால் இவர் இந்த குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். இவருக்கு எந்த தகுதியும் இல்லை. இவர் இப்படிப்பட்டவர் என்பதாகும். இவ்வாறு அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லை. சுயமே குற்றம் சுமத்தக் கூடியவர்கள் உண்மையில் தகுதியற்றவர்களாக இருக்கின்றனர். நாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்பவே செயல்பட வேண்டியதிருக்கின்றது. அல்லாஹ்வே நமது இறைவனாவான். ஒவ்வொருவரது இறைவனும் ஆவான். அவனே உணவு வழங்குகின்றான். நம்மை பராமரிக்கின்றான். அல்லாஹ்விடமிருந்தே நாம் அனைத்தையும் பெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லாஹ் எதை கூறுகின்றானோ அந்த விஷயம் தான் ஏற்றுக் கொள்ளப்படும். அது அல்லாமல் குற்றம் சுமத்துபவர்கள் கூறும் விஷயம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. புகார் கூறுகின்றவர்களும் மற்றவர்களுக்கு ஷரீஅத் கூறுவதற்கேற்ப தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால் சுயமே தங்களை ஷரீஅத்தின் கட்டளையை விட்டும் வெளியேற்றி விடுகின்றனர். தங்களை குற்றமற்றவர்களாக தாமே கருதிக் கொள்கின்றனர். தாங்களே நீதிபதியாகவும் ஆகிவிடுகின்றனர். அத்தகைய மக்கள் கூறும் விஷயங்கள் தொடர்பாக உண்மை தெரிய வரும் போது அவர்களுக்கும் கூட ஷரீஅத் கூறுவதற்கேற்ப தண்டனை வழங்கப்படும். சில விஷயங்கள் எத்தகைதென்றால் அதற்காக சாட்சிகள் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும். சாட்சிகள் கொண்டு வரப்படவில்லை என்றால் அந்த விஷயத்திற்கு எந்த மதிப்பும் இருக்காது. எந்நிலையிலும் ஷரீஅத் மற்றும் திருக்குர்ஆன் அடிப்படையில் அதற்கான தீர்ப்பு கூறப்படும். சில நேரங்களில் இவர் பொய் சத்தியம் செய்து விட்டார். அதன் மூலமாக தன்னைத் தானே காப்பாற்றிக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு முறை இது போன்ற விவகாரம் வந்தபோது சண்டை போட்டுக் கொண்ட இரு பிரிவினர் வந்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப இவர்களில் ஒரு பிரிவினர் சத்தியம் செய்து கூறுவர் என்று கூறினார்கள். மற்ற நபர் இவர் பொய்யராவார். இவர் இப்படிப்பட்ட நூறு சத்தியங்களைக் கூட செய்வார் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நான் இறைவனின் கட்டளைக்கேற்பவே தீர்ப்பளிக்க வேண்டியதிருக்கின்றது. இவர் பொய் சத்தியம் செய்கின்றார் என்றால் அவரது விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கின்றது. சுயமே அவன் அவருக்கு தண்டனை வழங்கி விடுவான் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 33 பக்கம் 265-271. குத்பா ஜுமுஆ 5 செப்டம்பர் 1952)

எனவே இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் கூறுகின்ற புகார் தொடர்பான தீர்ப்பு புகார் கூறுவோர் கூறுகின்ற விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்காது. புகார் மீதான தீர்ப்பு இறைவன் கூறியுள்ள வழிமுறைகளுக்கேற்பவே இருக்கும். எங்கு இரண்டு சாட்சிகள் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றதோ அங்கு இரண்டு சாட்சிகளை கொண்டு வர வேண்டும். எங்கு நான்கு சாட்சிகளை கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றதோ அங்கு நான்கு சாட்சிகளை கொண்டு வர வேண்டும். பிறகு அதற்கேற்ப விசாரனை செய்யப்பட்டு தீர்ப்பும் கூறப்படும். இறைவனது கட்டளைக்கேற்ப நமது விவகாரங்களையும் தீர்ப்புகளையும் அமைத்துக் கொள்வதில் தான் நமக்கு வெற்றி இருக்கின்றது. நமது சுய அகந்தையையும், சுய விளக்கங்களையும் அடிப்படையாக வைத்து ஜமாஅத் அமைப்பையும், காலத்தின் கலீஃபாவையும் அதற்கேற்ப செயல்படுமாறு வற்புறுத்தக் கூடியவர்களாக நீங்கள் இருக்கக் கூடாது. அதற்கேற்ப தீர்ப்பு கூறப்பட வேண்டும் என்றும் நீங்கள் கூறக்கூடாது. அல்லாஹ் புகார் கூறுபவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. தாங்கள் கூறுவது சரியானது தான் என்று அவர்கள் கருதுபவர்களாக இருந்தால் முழுமையான ஆதாரத்துடன் அதை எடுத்துக் கூற வேண்டும். அத்துடன் அவரது பெயரும், சரியான முகவரியையும் அவர் எழுதியிருக்க வேண்டும். பிறகு விசாரனைக்கு அவரும் உட்படுத்தப்படுவார்.

இவ்வாறே ஜமாஅத் அமைப்பில் உண்மையிலேயே ஒரு இடைவெளி ஏற்படுகின்றது என்பதை மக்கள் பார்க்கின்ற போது பிறகு தைரியத்துடன் முன்னால் வந்து அவர்கள் அது பற்றிய புகாரை கூற வேண்டும். எல்லாவற்றையும் எதிர்த்து அவர் செயல்பட வேண்டும். காலத்தின் கலீஃபா தரப்பிலிருந்தும் எவர்கள் தீர்ப்பு கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்களும் நீதியின் ஒவ்வொரு அம்சத்தையும் கண்முன் நிறுத்தியவாறு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறும், பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கு ஏற்பவும் தீர்ப்பளிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் ஜமாஅத்தின் அமைப்பிற்கு இதற்கான அறிவையும், நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். ஒரு ஜனாஸா ஷஹீதினுடைய ஜனாஸாவாகும். மதிப்பிற்குரிய ஷேக் மஜீது அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய ஷேக் சாஜிது மஹ்மூது சாஹிப் அவர்களை எதிரிகள் ஷஹீதாக்கி விட்டனர்.இவருக்கு வயது 55. கராச்சி மாவட்டத்தைச் சார்ந்த குல்ஸார் ஹிஜ்ரி என்ற ஹல்காவை சார்ந்தவராக இவர் இருந்தார். எதிரிகள் 27 நவம்பர் 2016 ல் மக்ரிப் தொழுகை நேரத்தில் வீட்டிற்கு வெளியே இவர் வண்டியில் வந்து அமர்ந்த சமயத்தில் இவரை துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

நமக்கு கிடைத்த விவரங்களின் அடிப்படையில் ஷேக் சாஜிது மஹ்மூது சாஹிப் அவர்கள் கராச்சியில் குல்ஷனே மஃமாரில் மாவு மில்லின் Spare Parts –ஐ Supply செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தார். 27 நவம்பர் 2016 அன்று மக்ரிப் சமயத்தில் கடைவீதியிலிருந்து வீட்டிற்கு சில பொருட்களை அவர் வாங்கி வந்தார். வண்டியில் அமர்ந்ததுமே மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது நான்கு முறை துப்பாக்கியால் சுட்டனர். பிறகு மோட்டார் சைக்கிளில் திரும்பி செல்லும் போதும் மீண்டும் நான்கு முறை துப்பாக்கியால் சுட்டனர். பிறகு அங்கிருந்து ஓடி விட்டனர். துப்பாக்கியால் சுட்டதன் காரணமாக ஒரு குண்டு சாஜிது மஹ்மூது சாஹிப் அவர்களின் நெஞ்சின் வலது பக்கத்தில் பட்டது. பிறகு விலா எலும்பில் பட்டு இடது புறமாக வெளியேறி விட்டது. ஒரு குண்டு காலில் பட்டது. சாஜிது மஹ்மூது சாஹிப் அவர்களை உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிறகு அங்கிருந்து இன்னொரு மருத்துவமனைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். ஆனால் அவர்களால் உயிர் பிழைக்க முடியவில்லை. சிகிச்சை ஆரம்பமாவதற்கு முன்னதாகவே அவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தி விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது கொள்ளு தாத்தாவான மதிப்பிற்குரிய ஷேக் ஃபஸ்ல் கரீம் சாஹிப் அவர்கள் மூலமாக அறிமுகமானது. இவர்கள் 1920 ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். ஷஹீது மர்ஹூமின் தந்தையாரான ஷேக் மஜீது சாஹிப் அவர்கள் பாகிஸ்தான் உருவான பிறகு கான்பூரிலிருந்து ஹிஜ்ரத் செய்து லாஹூர் வந்தார்கள். 1961 –ல் கராச்சியில் குடியேறினார்கள். ஷஹீதின் தாத்தாவான மதிப்பிற்குரிய காஜா முஹம்மது ஷரீஃப் சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் தெஹலி தர்வாஸா லாஹூரின் தலைவராக ஒரு நீண்ட காலம் இருந்து வந்தார்கள். அவர்களது கொள்ளு பாட்டனாரான அலாதீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். இவ்வாறே கல்கத்தாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் சேட் சித்தீக் பானி சாஹிப் அவர்கள் ஷஹீது மர்ஹூமின் மனைவியின் பாட்டனார் ஆவார்கள்.

ஷஹீது மர்ஹூம் B.A வரை கல்வி கற்றார்கள். ஐந்து வருடங்கள் வரை மிகவும் கஷ்டமான நிலைமைகளை அவர் சந்தித்து வந்தார். அதற்குப் பிறகு மாவு மில்லின் Spare Parts –ஐ Supply செய்யும் பணியை ஆரம்பித்தார். அதில் அல்லாஹ் மிகவும் அருள் செய்தான். பிறகு அதுவே அவரது தொழிலாக இருந்து வந்தது.

ஷஹீது மர்ஹூமின் மகனான ஹாரிஸ் மஹ்மூது சாஹிப் அவர்கள் அங்குள்ள மஜ்லிஸின் நாயிப் காயிதாக இருக்கின்றார். கராச்சியிலுள்ள குல்ஷனே இக்பாலின் வஸிய்யத் செயலராகவும் இருக்கின்றார். மகனும் F.E.C படித்த பிறகு தந்தையாருடன் சேர்ந்து தொழில் புரிந்து வந்தார். மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டவர் ஆவார். ஷஹீது மர்ஹூமின் மகளான சனா முபஷ்ஷிரா சாஹிபா அவர்கள் கராச்சியில் கல்வி கற்று வருகின்றார். அவருக்கு ஆறு மாதங்கள் வரை அமெரிக்கா செல்வதற்கான Scholarship –ம் கிடைத்தது. அங்கு சென்று ஒரு சிறிய Course –ஐ படித்து விட்டு திரும்பினார்.

மர்ஹூம் கிலாஃபத்தின் மீது அளவு கடந்த அன்பும், ஆழமான தொடர்பும் கொண்டவராக திகழ்ந்தார். தமது சந்ததிகளிடமும், ஜமாஅத் அமைப்பிடமும், கிலாஃபத்துடன் இணைந்திருக்குமாறு அவர் போதனை செய்து வந்தார். சந்தாக்களில் ஆர்வத்துடன் பங்கு பெறுபவராக இருந்தார். மகன்களுக்கும் இது பற்றி போதனை செய்து வந்தார். எப்போதும் தமது சந்தாக்களை செலுத்துவது பற்றிய கவலை அவருக்கு இருந்து வந்தது. சந்தாவின் தொகையை போடுவதற்காக கடையில் தனியாக ஒரு கல்லா பெட்டியை வைத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அவ்வப்போது கிடைக்கும் தொகையிலிருந்து அதற்குரிய சந்தா தொகையை இந்த பெட்டியில் போட்டு வந்தார். கொடுக்கல் வாங்களில் மிகவும் நேர்மையுடனும், உண்மையுடனும் நடந்து கொண்டார். பிறரை கண்டும் காணாமல் மன்னிக்கக் கூடியவராகவும், சகோதர சகோதரிகளுடன் பரிவுடன் நடந்து கொள்பவராகவும் மர்ஹூம் அவர்கள் திகழ்ந்தார்கள். ஒருபோதும் எவரிடமும் அவர் வெறுப்படைந்ததில்லை. மர்ஹூம் அவர்கள் மிகவும் தூய்மையான எண்ணங்களைக் கொண்டவராக இருந்தார்கள். இரத்த உறவுகளுக்கு மிகவும் மதிப்பளித்து வந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு இருந்த இரு கடைகளுக்கும் தனது தந்தை மற்றும் தனது மாமனாரின் பெயரையே அவர் வைத்திருந்தார்.

தனது மனைவியின் உறவினர்களுடனும் மிகவும் உயர்வான முன்மாதிரியை வெளிப்படுத்தும் விதத்தில் நல்ல முறையில் நடந்து கொண்டார். நண்பர்களையும், உறவினர்களையும் தூய உள்ளத்துடன் சந்தித்து வந்தார். அவரது இயல்பில் வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் முற்றிலும் இல்லாமல் இருந்தது. எழுதுபவர்கள் அனைவருமே அவரைப் பற்றி நான் கூறியுள்ள இந்த விஷயங்களையே எழுதியுள்ளனர்.

ஷஹீது மர்ஹூமின் தாயார் இன்றைய நாட்களில் மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இருந்த நோயின் காரணமாக மகன் ஷஹீதாகிவிட்டதைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவது கடினமாக இருந்தது. ஆனால் அவர்களுக்கு அது பற்றி தெரிய வந்த போது மகனின் சடலத்தை பார்த்து விட்டு தன்னையும் அறியாமல், எனது மகன் ஷஹீதாவான். எனவே அதற்காக எவரும் அழக்கூடாது என்று கூறினார். அந்த சொற்களை பல முறை அவர் திரும்ப திரும்ப கூறினார். ஷஹீது மர்ஹூம் அவர்களின் மனைவியும் மிகவும் தைரியத்துடன் தனது கணவர் ஷஹீதான செய்தியை செவியுற்றார். மிகவும் சிறந்த பொறுமையை அவர் மேற்கொண்டார்.

இவர்களது மகன் கூறுகின்றார். எனது தந்தையின் இயல்பில் வழக்கத்திற்கு மாற்றமாக மிகவும் நிதானமாக நடந்து கொள்ளும் தன்மை இருந்தது. இறைவன்

மீது பெரிய நம்பிக்கை இருந்தது. இறைவன் எனக்கு மிகவும் கண்ணியத்தை வழங்கியுள்ளான். எந்த அளவு எனக்கு கண்ணியத்தை வழங்கியுள்ளான் என்றால் அதைப் பற்றி என்னாலேயே நம்ப முடியவில்லை என்று அவர் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். இறை வணக்கங்களில் முறையாக ஈடுபட்டு வந்தார்.

இவர்களது உறவினர்களும் இவர்கள் மிகவும் சாதாரண இயல்புள்ள, தாழ்மை குணமுள்ள மனிதராக இருந்தார் என்றே கூறுகின்றனர். மர்ஹூமிற்கு 11 சகோதர, சகோதரிகள் இருக்கின்றனர். எல்லோருக்கும் மனைவி மக்கள் இருக்கின்றனர். மர்ஹூம் எல்லாரிடமும் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டார். சக்கர் மாவட்டத்தில் ஜமாஅத் அளவில் அங்குள்ள நிலைமைகள் மோசமான சமயத்தில் மேலும் அங்கு ஷஹாதத்துகள் நிகழ்ந்த சமயத்தில் ஷஹீது மர்ஹூம் அவர்கள் பலமுறை அங்கு சென்று Duty கொடுத்து உள்ளார்கள்.

இவர்களது மகள் கூறுகின்றார். இவர்களது வஃபாத்திற்குப் பிறகு நான் கனவில் மிகப் பெரிய ஒரு தோட்டத்தை கண்டேன். அதில் ஒளிமயமான பல நபர்கள் இருந்தனர். எல்லோரும் பிரகாசமான வெண்ணிற ஆடையை அணிந்திருந்தனர். எனது தந்தையாருக்கு அங்கு மிகப்பெரும் அந்தஸ்த்து கிடைத்தது. எல்லாரும் மகிழ்ச்சியுடன் அவரை சூழ்ந்து நிற்கின்றனர். பிறகு தந்தையார் ஒருபுறமாக நடந்து செல்கின்றார்கள். பிறகு அங்கிருந்த எல்லா மக்களும் ஊர்வலமாக அவர்களுடன் செல்வதை நான் பார்த்தேன். எல்லா மக்களும் எனது தந்தையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் தாயார் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றார்கள். நான் ஏற்கனவே கூறியிருந்ததைப் போன்றே அவர்களால் நடக்க முடியவில்லை. ஷஹாதத்திற்குப் பிறகு இவர்களது தாயார் கனவில் தனது மகனை கண்டார்கள். ஷஹீது மர்ஹூம் தனது தாயாரைக் கண்டு, நான் இங்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியகவும் இருக்கின்றேன். என்னைப் பற்றி நீங்கள் எவ்வித கவலையும் கொள்ளக் கூடாது என்று கூறினார்கள். இவர் தனது நினைவாக தனது தாயார் மற்றும் தனது மனைவியான மன்சூரா யாஸ்மீன் சாஹிபா அவர்களையும், மகன் ஷேக் ஹாரிஸ் மஹ்மூது, மகள் சனா முபஷ்ஷிரா சாஹிபா ஆகியோரையும் நான்கு சகோதரர்களையும், ஆறு சகோதரிகளையும் தனக்குப் பின்னால் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் ஷஹீதின் தகுதியை உயர்த்துவானாக. இவர்களது சந்ததிகளுக்கும் இவரது அடிச்சுவட்டை பின்பற்றிச் செல்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா, தர்வேஷான ஷேக் அப்துல் கரீம் சாஹிப் அவர்களின் மகனான ஷேக் அப்துல் கதீர் சாஹிபுடையதாகும். இவர்கள் காதியானைச் சார்ந்த தர்வேஷ் ஆவார்கள். இவர்கள் 26 நவம்பர் 2016 ல் மாரடைப்பின் காரணமாக தமது 92 வது வயதில் வஃபாத்தானார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. நவம்பர் 1947 –ல் பாகிஸ்தான் செல்வதற்கான இறுதி குழு காதியானிலிருந்து புறப்பட்ட போது இவர்கள் நோயாளியான தமது தாயாரை பற்றிப் பிடித்தவாறு டிரக்கில் அமர்ந்தார்கள். காதியானின் எல்லையை அடைந்த சமயத்தில் அவர்களது தாயார் அவரை டிரக்கிலிருந்து கீழே இறக்கி விட்டு தலைமையகத்தை பாதுகாப்பதற்காக அவரை காதியானிலேயே விட்டு விட்டு சென்று விட்டார்கள். இவ்வாறு தர்வேஷயாக இருக்கும் நற்பேறு அவர்களுக்கு கிடைத்தது. ஜமாஅத் அமைப்புடனும் கிலாஃபத் அமைப்புடனும் அளவு கடந்த நேசம் அவர்களுக்கு இருந்தது. அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் அவர்களுக்கு இருந்தது. வெற்றிகளையும், தோல்விகளையும் அல்லாஹ் அவற்றில் திருப்தி அடைகின்றான் என்று கருதியவாறு அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். மனைவி, குழந்தைகள், உறவினர்கள் ஆகியோருடன் எப்போது நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். தனது வாழ்நாளின் இறுதி வரை தனது பணிகளை தனது கைகளாலேயே செய்து வந்தார்கள். சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு அலுவலகங்களில், பல்வேறு துறைகளில் தொண்டு புரியும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது.

அவர்களது மகன் கூறினார். ஆண்டு மாநாடு வர இருப்பதனால் வீட்டிற்கு வெள்ளை அடிப்பதற்கான பொருள்களையும், சிமெண்டையும் வாங்கி வைத்திருந்தார். அதே இரவில் என்னை அழைத்து எனது நேரம் நெருங்கி விட்டது என்று எனக்கு தோன்றுகிறது. இந்த நபரிடம் நான் 500 ரூபாய் வாங்கி இருந்தேன். அதை திரும்ப செலுத்த வேண்டியதுள்ளது. இவ்வாறு மற்ற கணக்குகளையும் கூறினார். சிறிது நேரம் கழிந்ததுமே அவர் இறைவனிடம் சென்று நேர்ந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்கள் தனக்குப் பின்னால் மூன்று மகள்களையும் ஒரு மகனையும் விட்டுச் சென்றுள்ளார்கள். இவர்களது மகனான நாஸிர் வஹீது சாஹிப் அவர்கள் காதியானில் தொண்டு புரிவதற்கான நல்வாய்ப்பை பெற்றுள்ளார்.

மூன்றாவது ஜனாஸா காஷ்மீரிலுள்ள நாஸிராபாத்தை சார்ந்த மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது லோன் சாஹிபுடையதாகும். இவர்கள் 25 நவம்பர் அன்று வஃபாத்தானார்கள். இவர்கள் போலீஸ் பணியில் இருந்து வந்தார்கள். கோல்காமில் அடையாளம் தெரியாத சில நபர்கள் துப்பாக்கியால் சுட்டதனால் இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். இவரும் ஷஹீதின் தகுதியை பெற்றவராகவே இருக்கின்றார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹீது மர்ஹூம் தொழுகையையும், நோன்பையும் முறையாக பேணி வந்தார்கள். ஏழைகளுக்கு உதவி செய்பவர்களாகவும், நல்லுள்ளம் படைத்தவராகவும், நன்றி உணர்வுடன் நடந்து கொள்பவராகவும், மக்களுக்கு பயன் தரக்கூடியவராகவும், மிகவும் தைரியமுள்ளவராகவும், நல்லொழுக்கம் உடையவராகவும், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பவராகவும் திகழ்ந்தார்கள். எப்போதும் பொருள் தியாகத்தில் முன்னேறியவராக இருந்தார்கள். சந்தாக்களை விகிதாச்சாரத்தின் அடிப்படையிலும் அவற்றை அதிகரித்தும் கொடுத்து வந்தார்கள். தனது சிறிய சகோதர, சகோதரிகளுக்கு உதவி செய்து வந்தார்கள். அவர்களது கல்வி மற்றும் தர்பிய்யத் தொடர்பாக எப்போதும் கவனம் செலுத்தி வந்தார்கள். அவர்களது அண்டை வீட்டுக்காரர்கள் அவர்கள் உண்மையான முறையில் அண்டை வீட்டுக்காரர்களுக்குரிய உரிமையை செலுத்தி வந்தார்கள் என்று கூறுகின்றனர். இவர்களது துறையைச் சார்ந்தவர்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் எப்போதும் ஆர்வத்துடனும் விழிப்புணர்வுடனும் இவர்கள் செயல்பட்டு வந்தார்கள் என்று கூறுகின்றார்கள். ஒருபோதும் தனது பணியில் கவனமற்றவர்களாக அவர்கள் இருந்ததில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர் தனக்குப் பின்னால் தனது தாயாரையும் இரண்டு சகோதரிகளையும், ஆறு சகோதரர்களையும் மனைவியையும், மூன்று குழந்தைகளையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அவர்களது ஒரு மகன் வக்ஃபே நவ் திட்டத்தில் பங்கு பெற்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமின் தகுதிகளை உயர்த்துவானாக. அவர்களது சந்ததிகளையும் எப்போதும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் தொடர்புள்ளவர் –களாக வைத்திருப்பானாக. நன்மைகளில் அவர்களை நிலைத்திருக்கும்படி செய்வானாக. அவனே அவர்களது பாதுகாவலனாக இருப்பானாக!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

*அவர்களின் ஆட்சேபனையாகும். இதற்கான பதில் என்னவென்றால், ரமலான் மாதத்தில் ஒருபோதும் இந்த இரண்டு கிரகணங்களும் ஒன்று சேர்ந்ததில்லை என்பது இந்த ஹதீஸின் கருத்தல்ல. மாறாக, தான் ஒரு இறைதூதர் அல்லது நபி என்று வாதம் செய்த ஒருவரின் காலத்தில் ஒருபோதும் இந்த இரண்டு கிரகணங்களும் ஒன்று சேர்ந்ததில்லை. ஹதீஸின் வெளிப்படையான சொற்களும் இதைத்தான் நிரூபிக்கின்றது. தான் நபி என்றோ தூதர் என்றோ வாதம் செய்த ஒருவரது காலத்தில் இந்த இரண்டு கிரகணங்களும் ரமலானின் எப்போதாவது ஒன்று சேர்ந்திருப்பதாக எவராவது வாதம் செய்கின்றார் என்றால் அதற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டியது அவரது கடமையாகும். குறிப்பாக இந்த விஷயம் யாருக்குத்தான் தெரியாது ? இஸ்லாமிய வருடத்தில் அதாவது கடந்த **1300** வருடங்களில் பல மக்களும் முழுக்க முழுக்க இட்டுக்கட்டி பொய் கூறியவாறு தங்களைப் பற்றி வாக்களிக்கப்பட்ட மஹ்தி என்று வாதமும் செய்துள்ளனர். இன்னும் சொல்வதென்றால், அவர்கள் போர்களும் புரிந்துள்ளனர். ஆனால், அவர்களது காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திர கிரகணம் மற்றும் சூரிய கிரகணம் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்தன என்பதை எவரால் நிரூபிக்க முடியும் ? எதுவரை இதற்கான ஆதாரம் எடுத்து வைக்கப்படவில்லையோ அதுவரை சந்தேகமின்றி இந்த சம்பவம் வழக்கத்திற்கு அப்பாற்பட்டதேயாகும். ஏனென்றால், எந்த சம்பவத்தை வேறு எங்குமே காண முடியவில்லையோ அதனையே வழக்கத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறுகின்றனர். மேலும் ஹதீஸில் மட்டுமல்லாமல் திருக்குர்ஆனில் கூட இதன் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.* وَخَسَفَ الْقَمَرُ - وَجُمِعَ الشَّمْسُ وَالْقَمَرُ *என்ற வசனத்தை பாருங்கள்.*[1]

---

[1] இறைவன் சுருக்கமான சொற்களில் இறுதிக் காலத்தின் அடையாளம் இதுவாகும் எனக் கூறியுள்ளான். அதாவது, ஒரே மாதத்தில் சந்திர சூரிய கிரகணங்கள் ஒன்று சேர்ந்து நிகழும் என்று கூறியுள்ளான். இதே வசனத்தின் அடுத்த பகுதியில் இந்த நேரத்தில் பொய்யனுக்கு தப்பி ஓடுவதற்கான இடமும் இருக்காது என்றும் இறைவன் கூறியுள்ளான். இதிலிருந்து சூரிய சந்திர கிரகணங்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் நிகழும் என்பது தெரிய வருகின்றது. இதன் சுருக்கமான கருத்து என்னவென்றால், சூரிய சந்திர கிரகணங்கள் இறைவனின் முன்னறிவிப்பிற்கேற்ப நடக்கும்போது பொய்யர்கள் மீது அத்தாட்சிகள் நிறைவடைந்து விடும்.

*(ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 202-204)*

# ஜுமுஆ பேருரை

எவரது கண்களில் திரையிருக்கிறதோ, நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று முடிவே செய்து விட்டார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் ஆதரவும் தென்படுவதில்லை; அடையாளங்களும் தென்படுவதில்லை. நபிமார்களை மறுப்பவர்களுக்கு எப்போதும் இதுவே வழிமுறையாக இருந்திருக்கின்றது. அவர்கள் அடையாளங்களைப் பார்த்துக் கொண்டே எங்களுக்கு அடையாளங்களைக் காட்டுங்கள் என்று கூறுவார்கள். அவர்கள் வரம்பை மீறி விட்டதன் காரணமாக அல்லாஹ் அவர்களது உள்ளங்களை அடைத்து விடுகின்றான். பிறகு அவர்களால் உண்மையைப் பெறவே முடியாது. சில வேளைகளில் அல்லாஹ் நபிமார்களுக்கு ஆதரவாக அவர்களையே படிப்பினைக்குரிய அடையாளமாக்கியும் விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கு ஆதரவாக இவை நிறைவேறியுள்ளன என அல்லாஹ்வின் பல அடையாளங்களைக் கூறினார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடையாளங்களையும் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த விஷயங்களைக் கூறினார்கள். முன்னறிவிப்புகளைச் செய்தார்கள். அவை நிறைவேறின என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், இந்த மார்க்கத் தலைவர்கள் தாமும் ஏற்காததோடு மற்றவர்களையும் வழிகெடுத்தனர். இப்போது வரை வழிகெடுத்துக் கொண்டும் இருக்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஆதரவாக வெளிப்பட்டுள்ள அடையாளங்களை ஈமானுக்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நாம் தினமும் அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகளின் காட்சியைக் காண்கிறோம். கண்டிப்பாக அந்த நாளும் வரும் - இன்ஷா அல்லாஹ். ஜமாஅத் எந்த அளவுக்கு வளர்ச்சி அடையும் என்றால் மற்ற சமுதாயங்கள் முற்றிலும் சாதாரணமாகி விடும். ஆனால் நாம் நம்மிடமும் நமது சந்ததிகளிடமும் மார்க்கத்தின் ஆன்மாவை ஊத வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலமே அல்லாஹ் நமக்கு அந்தக் காட்சியைக் காட்டுவான்.

ஆதரவுகள் இருக்கும் வேளையில் எதிர்ப்பும் இருக்கும். எப்போதும் நபிமார்களின் ஜமாஅத்தின் வழி இவ்வாறே இருக்கிறது. ஆனால் இந்த எதிர்ப்புகள் அச்சப்படுத்துவதில்லை. மாறாக, அது ஈமானை வலுப்படுத்துகின்றன. அது ஈமான் அதிகரிக்கக் காரணமாகின்றது.

சில நாட்களுக்க முன் ரப்வாவில் தஹ்ரீகே ஜதீது அலுவலகங்களிலும் ஸியாவுல் இஸ்லாம் பிரஸ் மீதும் அரசின் காவல்துறையின் ஒரு குறிப்பிட்ட துறை மேற்கொண்ட ரெய்டு மற்றும் சிலரை கைது செய்ததற்கு இவற்றால் நாங்கள் பயப்படக் கூடியவர்கள் அல்ல. எங்களது ஈமான் வலுவாக இருக்கின்றது. நாங்கள் ஒவ்வொரு துன்பத்தையும் எதிர்த்து நிற்போம்; தியாகங்கள் செய்வோம் என்று அஹ்மதிகள் ஹுஸூர் அவர்களுக்கு தெரிவித்து மேற்கொண்ட எதிர்நடவடிக்கை பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

---

அல்ஜீரியாவிலும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அஹ்மதிகள் மீது மிகப்பெரும் அநீதியிழைக்கப்படுகின்றது.

---

அஹ்மதிகள் ஆட்சிக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்று அவதூறு கூறப்படுகிறது அல்லது குழப்பத்தை உருவாக்க அவர்கள் விரும்புகின்றனர் என்று கூறுகிறார்கள். ஆனால் உலகில் எந்த இடத்திலும் அஹ்மதிகள் எப்போதும் எந்த நாட்டின் சட்டத்துடனும் மோதுபவர்கள் அல்ல. ஆட்சியுடன் சண்டை போடுபவர்கள் அல்ல. நாங்கள் அமைதியையும் நேசத்தையும் அன்பையும் பரப்புபவர்களாவோம். அதற்காக தியாகம் செய்ய வேண்டியது வந்தால் அதனையும் செய்வோம் - இன்ஷா அல்லாஹ்.

---

பாகிஸ்தான் மவ்லவிகளோ, பிற மார்க்கத் தலைவர்களோ அல்லது வேற உலகியல் சக்திகளோ அல்லாஹ்வின் பார்வையில் அவர்கள் ஒரு பொருட்டே அல்ல. அவர்கள் வெறும் ஆடுகளைப் போன்றவர்கள். இவர்கள் ஒருபோதும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை தடுக்க இயலாது. ஆனால் அதற்காக நாம் தப்லீக் செய்யட்டும்; மேலும் பரப்பட்டும் என்று நமது முபல்லிக்குகளை மட்டும் நாம் சார்ந்து நிற்க இயலாது. இந்த வளர்ச்சியில் நாம் பங்கு பெற வேண்டுமானால் நாம் பங்கு பெறவும் வேண்டும். நாமும் கூட துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தமது ஆன்மீகத்தை அதிகரிக்க வேண்டும். நமது இறைத் தொடர்பை அதிகரிக்க வேண்டும்; அதை உருவாக்க வேண்டும். இவை தான் அஹ்மதிய்யத்திற்கு இருந்து வரும் எதிர்ப்பை அழிப்பவையாகும். அஹ்மதிய்யதின் வளர்ச்சியிலும் நம்மை பங்குதாரர்களாக்குபவையாகும் - இன்ஷா அல்லாஹ்.

---

இந்தோனேஷிய முபல்லிக் ஆன மதிப்பிற்குரிய ஸுஃப்னி ஸஃபர் அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**9 டிசம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **9 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

எவரது கண்களில் திரையிருக்கிறதோ, நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று முடிவே செய்து விட்டார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் ஆதரவும் தென்படுவதில்லை; அடையாளங்களும் தென்படுவதில்லை. நபிமார்களை மறுப்பவர்களுக்கு எப்போதும் இதுவே வழிமுறையாக இருந்திருக்கின்றது. அவர்கள் அடையாளங்களைப் பார்த்துக் கொண்டே எங்களுக்கு அடையாளங்களைக் காட்டுங்கள் என்று கூறுவார்கள். அவர்கள் வரம்பை மீறி விட்டதன் காரணமாக அல்லாஹ் அவர்களது உள்ளங்களை அடைத்து விடுகின்றான். பிறகு அவர்களால் உண்மையைப் பெறவே முடியாது. சில வேளைகளில் அல்லாஹ் நபிமார்களுக்கு ஆதரவாக அவர்களையே படிப்பினைக்குரிய அடையாளமாக்கியும் விடுகிறான்.

அத்தகையோர்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எதிரிகள் ஆவர். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தாலும் தமது பிடிவாதத்தால் அவர்களுக்கு எந்த அடையாளமும் தென்படுவதில்லை அல்லது அவர்கள் தமது பார்வையைத் திருப்பிக் கொண்டனர். அத்தகைய மறுப்பின் தலைவர்களுள் சிலர் பிறகு படிப்பினையின் அடையாளமாகியும் உள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்கு ஆதரவாக இவை நிறைவேறியுள்ளன என அல்லாஹ்வின் பல அடையாளங்களைக் கூறினார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடையாளங்களையும் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த விஷயங்களைக் கூறினார்கள். முன்னறிவிப்புகளைச் செய்தார்கள். அவை நிறைவேறின என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், இந்த மார்க்கத் தலைவர்கள் தாமும் ஏற்காததோடு மற்றவர்களையும் வழிகெடுத்தனர். இப்போது வரை வழிகெடுத்துக் கொண்டும் இருக்கின்றனர்.

இந்த அடையாளங்களைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இயக்கத்தின் உண்மைக்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அடையாளங்களைக் கூறினார்கள். அவர்கள் கூறிய அடையாளங்களை விளக்கும்போது கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவற்றை அடையாளங்கள் என்று கூறியுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை அன்னார் கூறியுள்ளார்கள். அவற்றுள் சூரிய சந்திர கிரகணங்களின் அடையாளங்களும் இருக்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த அடையாளங்கள் நிறைவேறுவதற்கு முன் வரை மவ்லவிமார்கள் அழுதழுது இந்த ஹதீஸை படித்து வந்தார்கள். இந்த அடையாளம் ஒருமுறையல்ல; இருமுறை

நிறைவேறியது. ஒருமுறை இந்த நாட்டில் அதாவது இந்தியாவிலும் மற்றொரு முறை அமெரிக்காவிலும் நிறைவேறியது. அப்போது இந்த அடையாளங்களைக் கேட்ட மக்கள் தமது கருத்திலிருந்து திரும்பினர்; அடையாளத்தை மறுக்க முடியவில்லை. ஏனென்றால், அதுவோ வெளிப்பட்டு விட்டது. ஆனால், பிடிவாதம் வந்து விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நண்பர் கூறினார். இந்த அடையாளம் நிறைவேறிய போது குலாம் முர்தஸா என்ற பெயரை உடைய மவ்லவி சந்திர கிரகணம் நடந்தபோது தமது தொடையில் கைகளால் அடித்தவாறு தமது ஆதங்கத்தையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்தியவாறு 'இப்போது உலகம் வழிகெட்டு விட்டது' என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிந்தனை செய்யுங்கள். அவர் இறைவனை விட அதிகமாக இவ்வுலகின் நலனை நாடுபவராகி விட்டாரா?

இதுபோன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அடையாளமாக பிளேக் நோயின் அடையாளம் இருக்கிறது. கால்வாய்கள் தோண்டப்படும் என்ற அடையாளங்கள் உள்ளன. திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் உள்ளன. புதிய குடியிருப்புகள் உருவாக்கப்படுவதற்கான முன்னறிவிப்புகள் உள்ளன. மலைகள் பெயர்க்கப்படுவதற்கான அடையாளங்கள் உள்ளன. நூல்கள், செய்தி ஏடுகள் பரப்பப்படுவதற்கான அடையாளம் உள்ளது. புதிய வாகனங்களைப் பற்றி அடையாளம் உள்ளது. பல அடையாளங்களை அன்னார் கூறியுள்ளார்கள். அவற்றைப் பற்றி திருக்குர்ஆனிலும் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் அடையாளங்கள் மற்றும் இறைவனின் ஆதரவுகளையும் பார்ப்பதற்குப் பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஆட்சேபனை செய்கின்றனர். அவர்கள் சின்னச் சின்ன வியத்தகு ஆட்சேபணைகளைச் செய்துள்ளனர். விளையாட்டுத்தனமான ஆட்சேபணைகளைச் செய்துள்ளனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடையாளங்களுக்கு மேல் அடையாளங்களைக் காட்டினார்கள். சிலர், இவரது தலைப்பாகை கோணலாக இருக்கிறது. இவர் எவ்வாறு மஸீஹ் மவ்வூது ஆக இருக்க முடியும்? என்று கூறினர். இவ்வாறான ஆட்சேபணைகளாக அவை இருந்தன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அற்புதங்களுக்கு மேல் அற்புதங்களைக் காட்டினார்கள். ஆனால், இத்தகைய சிலர், இவருக்கு காஃப் சரியாக உச்சரிக்க முடியவில்லை. இவர் எங்கிருந்து மஸீஹ் மவ்வூது ஆக முடியும்? என்றனர். அன்னார் அடையாளத்திற்கு மேல் அடையாளம் காட்டினார்கள். இன்னும் சிலர், இவர் மனைவிக்காக நகைகளைத் தயாரிக்கச் செய்துள்ளார்; இவர் பாதாம், எண்ணெய் போன்றவற்றை பயன்படுத்துகிறார். இவரை எப்படி நாம் ஏற்க முடியும்? என்று கூறினர். இதுவே இவர்களின் ஆட்சேபனையாகும். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீங்கள் முந்தைய அடையாளங்களிலிருந்து பயனடைந்திருக்கிறீர்களா? இப்போது வேறு அடையாளங்களைக் கேட்கிறீர்கள்? முந்தைய ஆயிரக்கணக்கான அடையாளங்களிலிருந்து எந்தப் பயனும் அடையவில்லை. பிறகு வேறு அடையாளங்களிலிருந்து என்ன பயன் அடைவீர்கள்? என்று கேட்கின்றார்கள்.

அத்தகைய மக்கள் எப்போதும் விலக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். அதுவே அவர்களது பங்கில் உள்ளது. அதாவது, விலக்கப்பட்டவராக இருப்பதே அவர்கள் பங்கில் உள்ளது. இது எத்தகைய வலுவான அடையாளம் என்றால் தினமும் அது நிறைவேறுகிறது.

இதனைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பராஹீனே அஹ்மதிய்யா நூலில் அல்லாஹ் எனக்கு ஒரு துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அதாவது, இல்ஹாமாக ஒரு துஆவை கற்றுத் தந்தான். ரப்பி லா தஸர்னீ ஃபர்தன் வஅன்த கைருல் வாரிஸீன் – இறைவா! என்னை தனியாக விட்டு விடாதே! என்னை ஒரு ஜமாஅத் ஆக்குவாயாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே இந்த மொழிபெயர்ப்பைச் செய்துள்ளார்கள்.

பிறகு இன்னோரிடத்தில் கூறியுள்ளான்: யஃதீக்க மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக் – எல்லா தரப்பிலிருந்தும் உமக்கு உதவிகளும் விருந்தினர்களுக்குத் தேவையான பொருள்களையும் இறைவனே ஏற்பாடு செய்து தருவான். ஒவ்வொரு வழியிலிருந்தும் அவை உம்மிடம் வரும். பிறகு கூறினான்: யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக் – எல்லாப் புறமிருந்தும் எல்லா வழிகளிலிருந்தும் விருந்தினர் உம்மிடம் வருவர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இது 26 வருடங்களுக்கு முந்தைய முன்னறிவிப்பாகும். அன்னார் இந்த விஷயத்தைக் குறிப்பிடும்போது மேற்கண்ட விபரங்கள் அச்சாகி அவ்வளவு காலம் ஆகியிருந்தன. அது இப்போது வரை மிகவும் மகிமையுடன் நிறைவேறி வருகிறது. இது ஜமாஅத்தின் முன்னேற்றம் பற்றிய முன்னறிவிப்பாகும். நாம் பார்க்கிறோம். இந்த முன்னறிவிப்பு இன்று வரை மிகவும் மகிமையுடன் நிறைவேறுவதைப் பார்க்கிறோம். அன்னாரின் ஜமாஅத் ஒவ்வொரு நாளும் வளர்ச்சி காண்பது, பொருள் தியாகத்தில் மக்கள் வளர்வது போன்றவை அன்னாரின் உண்மைக்கு ஒரு வலுவான சான்றாகும். ஆனால், எவரது கண்கள் பார்ப்பதற்கு தகுதி பெற்றுள்ளனவோ அவர்களே பார்க்கின்றனர். குருடர்களுக்கு இது தெரிவதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில இல்ஹாம்களில் கூறப்பட்ட அஹ்மதிய்யத்தின் வெற்றிக்கான வழிமுறைகள் மற்றும் ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் பற்றிய கருத்துக்களுள் சிலவற்றை எடுத்து வைக்கிறேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தொடர்ந்து கூறி வந்தான். முன்னர் வந்த நபிமார்களின் ஜமாஅத்துகள் செய்த தியாகங்களைப் போன்றே அஹ்மதிய்யா ஜமாஅத்தும் தியாகம் செய்ய வேண்டியது வரும். இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கனவில் கண்டார்கள். அன்னார் இதுபற்றி கூறுகின்றார்கள்: நான் நிஸாமுத்தீன் உடைய வீட்டில் நுழைகிறேன். நிஸாமுத்தீன் என்றால் மார்க்க அமைப்பு என்பதாகும். இந்தக் கனவின் பொருளாவது கடைசியில் ஒருநாள் அஹ்மதிய்யா ஜமாஅத் மார்க்கத்தின் அமைப்பு ஆகி விடும். உலகின் எல்லா அமைப்புகளையும் மிகைத்து விடும் – இன்ஷா அல்லாஹ். ஆனால் இந்த வெற்றி எவ்வாறு ஏற்படும்?

இதுபற்றி அன்னார் கனவிலேயே கூறுகின்றார்கள்: நாம் இந்த வீட்டில் சிறிது ஹஸனின் வழிமுறைப்படி நுழைவோம். இன்னும் சிறிது ஹுஸைனின் வழிமுறைப்படி நுழைவோம். எல்லாரும் அறிவர். ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களது வெற்றி சமாதானத்தின் மூலம் நடந்தது.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. நிஸாமுத்தீனின் இடத்திற்கு ஜமாஅத் செல்லும் என்பது சரிதான். ஆனால் சிறிது அன்பு, சமாதானம், நேசம் மூலமாகவும் இன்னும் சிறிது ஷஹாதத் மற்றும் தியாகங்கள் மூலமாகவுமே செல்லும். நம்மில் ஒருவர் எந்த சமாதானமும் அன்பும் நேசமும் இல்லாமல் இந்த இயக்கம் வளர்ச்சி பெறும் என்று கருதினால் அவர் தவறிழைக்கிறார். அல்லது ஒருவர் எந்த ஷஹாதத்தோ, தியாகமோ இல்லாமல் இந்த இயக்கம் வளர்ந்து விடும் என்று கருதினால் அவரும் தவறே செய்கிறார். நாம் சிலவேளை சமாதானம் மற்றும் சாந்தியின் பக்கம் செல்ல வேண்டியது வரும். சிலவேளை நாம் ஹுஸைனிய வழிமுறையை மேற்கொள்ள வேண்டியது வரும். அதன் பொருள், நாம் எதிரிகளின் முன் மரணித்தாலும் அவர்களது பேச்சை ஏற்க மாட்டோம். இந்த இரு வழிமுறைகளும் நமக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வெறும் மஸீஹ் உடைய நடைமுறை மட்டுமே நமக்காக நிர்ணயிக்கப்படவும் இல்லை. வெறும் மஹ்தி உடைய நடைமுறை மட்டுமே நமக்காக நிர்ணயிக்கப்படவும் இல்லை. ஒரு நடுத்தர வழியில் நாம் போக வேண்டியுள்ளது. ஒரு வெற்றி அன்பு, நேசம், சமாதானம் மூலம் கிடைக்கும். ஒரு வெற்றி தியாகங்கள் மூலம் கிடைக்கும். இதற்குப் பிறகே ஜமாஅத் நிஸாமுத்தீனின் (மார்க்க அமைப்பின்) வீட்டில் நுழையும். அதில் வெற்றியைப் பெறும். இந்த இரு கருத்துக்களின் முன்னுதாரணத்தையும் நாம் பார்க்கிறோம். ஜமாஅத் மக்கள் இதனை காட்டுகிறார்கள். அமைதி, சமாதானம் பற்றிய போதனை நம்மிடம் உள்ளது. மார்க்கத்திற்காக ஜமாஅத் தியாகமும் செய்கிறது.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது. இந்த இல்ஹாம் பற்றி இன்னும் சில குறிப்பு உள்ளது. மஸ்ஜித் முபாரக்கையொட்டி ஓரிடம் உள்ளது. இதில்தான் மிர்ஸா நிஸாமுத்தீன் உடைய வீடு இருந்தது. அதனுள் ஓரளவுக்கு ஹஸனின் வழிமுறையில் நுழைவோம். ஓரளவுக்கு ஹுஸைனின் வழிமுறையில் நுழைவோம். இந்த இல்ஹாமின் பொருள் என்னவென்று பலர் வியந்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து கேட்டேன். அன்னார் இந்த இல்ஹாமிற்கு என்ன பொருள் என்று தெரியவில்லை என்று கூறினார்கள். அதற்குரிய நேரத்தில்தான் பொருளும் திறக்கிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாரிடம் ஓர் ஆள் கூட இல்லாத காலத்தில் கூறினார்கள். இறைவன் எனக்கு தெரிவித்துள்ளான். உம்முடைய ஜமாஅத் எந்த அளவுக்கு வளர்ந்து விடும் எனில், அத்துடன் ஒப்பிடும்போது பிற சமுதாயங்கள் தமது இருப்பிடத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றிக் கொள்ளும் மக்களைப் போன்று ஆகி விடும்.

நாம் தினமும் அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகளின் காட்சியைக் காண்கிறோம். கண்டிப்பாக அந்த நாளும் வரும் – இன்ஷா அல்லாஹ். ஜமாஅத் எந்த அளவுக்கு வளர்ச்சி அடையும் என்றால் மற்ற சமுதாயங்கள் முற்றிலும் சாதாரணமாகி விடுவர். ஆனால் நாம் நம்மிடமும் நமது சந்ததிகளிடமும் மார்க்கத்தின் ஆன்மாவை ஊத வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலமே அல்லாஹ் நமக்கு அந்தக் காட்சியைக் காட்டுவான். ஆதரவுகள் இருக்கும் வேளையில் எதிர்ப்பும் இருக்கும். எப்போதும் நபிமார்களின் ஜமாஅத்தின் வழி இவ்வாறே இருக்கிறது. ஆனால் இந்த எதிர்ப்புகள் அச்சப்படுத்துவதில்லை. மாறாக, அது ஈமானை வலுப்படுத்துகின்றன. அது ஈமான் அதிகரிக்கக் காரணமாகின்றது.

சில நாட்களுக்குள் முன் ரப்வாவில் தஹ்ரீகே ஜதீதின் அலுவலகங்களில் மற்றும் ஸியாவுல் இஸ்லாம் பிரஸ் மீது அரசின் காவல்துறையின் ஒரு பிரிவான Counter Terrorist Police என்று அழைக்கப்படுகின்ற பிரிவினர் அதாவது தீவிரவாதத்தை அழிக்கவும் தீவிரவாதிகளுடன் மோதுவதற்காகவும் உருவாக்கப்பட்டவர்கள் ரெய்டு செய்தனர். அங்கிருந்த இரண்டு முரப்பிகளையும் சில பணியாளர்களையும் பிடித்துக் கொண்டு சென்றார்கள். இது குறித்து ரப்வாவிலிருந்து சிலர் எனக்கு எழுதினர். அவர்களில் பெண்களும் கூட இருந்தனர். அவர்கள் எழுதினர். இவற்றால் நாங்கள் பயப்படக்கூடியவர்கள் அல்ல. இதனால் எமது ஈமான் உறுதியாகவே இருக்கிறது. எப்போதும் உறுதியாகவே உள்ளது. நாங்கள் எல்லாப் பிரச்சனைகளையும் எதிர்கொள்வோம். தியாகம் செய்வோம். இந்த ஆன்மா தான் முஃமீன்களிடம் இருக்க வேண்டும். இதனைக் குறித்துதான், இவற்றை நீங்கள் செய்ய வேண்டியது வரும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் எண்ணற்ற உதவிகளின் காட்சியைப் பார்க்கிறோம். நிச்சயமாக கடைசி வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்குரியதாகும். எதிர்ப்பு ஏற்படவே செய்கிறது. ஏற்படவும் செய்யும். இந்த தாக்குதல் தொடுப்பவர்கள், ரெய்டு செய்பவர்கள் – இவர்கள் தாக்குதல் தொடுப்பவர்கள் அல்ல. ரெய்டு செய்பவர்கள் என்றே கூற வேண்டும். இவர்களுக்கு எல்லாவற்றையும் விட அதிக பயம் அஹ்மதிகளால்தான் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் உள்ளத்தில் அல்லாஹ்வின் பயத்தை உருவாக்குங்கள் என்று அஹ்மதிகள் கூறுகிறார்கள். அஹ்மதிகள் அல்லாஹ்வுக்கு பயப்படச் சொல்கிறார்கள். அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். அதற்கு அஞ்சுங்கள் என்று கூறுகிறார்கள். இத்தகையவர்களின் பார்வையில் அஹ்மதிகள் எவ்வாறு இப்படி கூறலாம்? இவர்கள் நம்மை இறைவனுக்கு பயப்படச் சொல்கிறார்கள். இதனை விட பெரிய தீவிரவாதம் வேறென்ன இருக்க முடியும். எனவே இவர்களை பிடியுங்கள். இவர்களை அழியுங்கள் என்கின்றனர்.

அல்லாஹ் இவர்களுக்கும் அறிவை வழங்குவானாக! இவர்கள் உண்மையை புரிவார்களாக! அவன் நாட்டை இந்த உண்மையான தீவிரவாதிகளான மவ்லவிகளிடமிருந்து காப்பானாக! இவர்கள் நாட்டில் குழப்பத்தை பரப்பி வைத்துள்ளார்கள். எந்த உயிரும் இவர்களிடமிருந்து பாதுகாப்பாக இல்லை. தீவிரவாதத்தை அழிக்கின்ற இந்த சிறப்பு காவல் படைக்கும் அவன் துணிச்சலை வழங்குவானாக! அமைதியான, நாட்டை நேசிக்கின்ற, நாட்டின் சட்டத்தைப் பேணுகின்ற அஹ்மதிகளின் மீது கை வைப்பதற்குப் பதில் எவர்களின் கைகளால் பொதுமக்களின் உயிரும் கூட பாதுகாப்பாக இல்லையோ அத்தகையவர்களுடன் இவர்கள் போரிடட்டும். யுத்தம் செய்யட்டும். அவர்கள் நாட்டின் வேரை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமது இரு கரங்களால் நாட்டை கொள்ளையடிக்கிறார்கள். அஹ்மதிகள் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் பாகிஸ்தானை பாதுகாப்பாக வைப்பானாக! இந்த அநீதியிழைப்பவர்களின் குழப்பங்களிலிருந்து அதை பாதுகாப்பானாக! அது தவிர அஹ்மதிகள் செய்கின்ற தியாகங்களுக்காக பலனை அல்லாஹ் வழங்கிக் கொண்டேயிருப்பான் – இன்ஷா அல்லாஹ்.

அதுபோன்று அல்ஜீரியாவிலும் அஹ்மதிகளின் மீது அரசின் தரப்பிலிருந்து அநீதியிழைக்கப்படுகிறது. அவர்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக! அவர்களுக்கு உறுதியான பாதத்தை வழங்குவானாக! அங்குள்ள அரசுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் அஹ்மதிய்யத்தின் உண்மையைப் புரிவார்களாக! அஹ்மதிகள் அமைதி நிறைந்தவர்களும் சட்டத்தைப் பேணுபவர்களும் ஆவர் என்பதை உணர்வார்களாக!

அஹ்மதிகள் ஆட்சிக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்று அவதூறு கூறப்படுகிறது அல்லது குழப்பத்தை உருவாக்க அவர்கள் விரும்புகின்றனர் என்று கூறுகிறார்கள். ஆனால் உலகில் எந்த இடத்திலும் அஹ்மதிகள் எப்போதும் எந்த நாட்டின் சட்டத்துடனும் மோதுபவர்கள் அல்ல. ஆட்சியுடன் சண்டை போடுபவர்கள் அல்ல. நாங்கள் அமைதியையும் நேசத்தையும் அன்பையும் பரப்புபவர்களாவோம். அதற்காக தியாகம் செய்ய வேண்டியது வந்தால் அதனையும் செய்வோம் – இன்ஷா அல்லாஹ்.

மீண்டும் நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய சான்றின் பக்கம் வருகிறேன். அன்னார் கூறுகிறார்கள்: உலகில் எல்லாவற்றிலும் அதிகமாக ஆபத்தான எதிர்ப்பு இணை வைக்கப்படுபவர்களிடமிருந்து ஏற்படுகிறது. பஞ்சாபியில் ஒரு பழமொழி உண்டு. ஷராகத் ததானா ஸர் துக்தே திகானா – பெரும் பெரும் எதிர்ப்புகள் நெருக்கமானவர்களின் தரப்பிலிருந்து ஏற்படுகின்றன. ஏனெனில் அவர்களிலிருந்து ஒருவர் எழுந்து உலகில் பெருமையையோ கண்ணியத்தையோ பெறுவதை அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியாது. ஒரு துண்டு நிலத்திற்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் முழு உலகமும் இவர் பக்கம் வருவதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? எனவே, முழுமையான ஆவேசம் காட்டி அவர்களை அமுக்க நினைக்கிறார்கள். எந்த அளவுக்கு எனில் அவர்கள் எதுவும் செய்ய முடியாமல் போய் விடுகிறார்கள். அவர்களால் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் ஏதாவது ஒரு வகையில் தமது உள்ளத்தின் காய்ச்சலை வெளியே காட்ட முயல்கிறார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஷாஹ்பூரின் பிரமுகர் ஒருவருக்கு கான்பஹாதூர் என்ற பட்டம் கிடைத்தது. அதே குடும்பத்தைச் சார்ந்த மிகவும் ஏழையான பெண் ஒருவர் தமது மகனுக்கு கான்பஹாதூர் என்று பெயர் வைத்து விட்டாள். நீ என்ன செய்துள்ளாய்? என்று அவளிடம் கேட்கப்பட்டது. அதற்கு என்ன காரணம்? என்று கேட்கப்பட்டது. அப்போது அப்பெண், என் மகன் வளர்ந்து எப்படி ஆகப் போகிறான் என்று என்ன தெரியும். மக்கள் இவனை கூப்பிடும்போது கான்பகதூர் என்று அவரைப் போன்று அவருக்கு இணையாக இவனையும் கூப்பிடுவார்கள் என்று கூறினார். இவ்வகையில் வேறு எதுவும் செய்ய முடியாவிட்டால் பெயரையாவது வைத்து விடுகிறார்கள்.

இந்த வகையில் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்யும்போது அவர்களின் உறவினர் ஒருவரும் இமாம் ஆகி விட்டதாக வாதம் செய்தார். அவர்கள் நெருக்கமான உறவினர்கள் ஆவர். அந்த உறவினர், நீங்கள் வாதம் செய்தீர்கள். மக்கள் உங்கள் மீது கவனம் செலுத்துகிறார்கள். எனவே நானும் வாதம் செய்கிறேன் என்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு ஃபார்ஸி சொற்றொடரை உதாரணமாக கூறுகிறார்கள். ஃபிக்ரே ஹர்கஸ் பி கதரே ஹிம்மத் அஸ்த் – ஒவ்வொருவரின் சிந்தனையும் தகுதியும் அவரது தைரியத்திற்கேற்பவே இருக்கும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு வாதம் செய்தார்கள். நான் இவ்வுலகிற்கு நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளேன். குறைந்த தகுதியிலுள்ள மக்களுக்கு மட்டுமல்ல. பெரும் பெரும் மன்னர்களும் கூட என்னைப் பின்பற்றுவது கடமையாகும். இதற்கு இணையாக வருபவர்களின் நிலை வெறும் பெயர் வைப்பதைப் போன்றதாகும். அந்த உறவினர், தான் துப்புரவுப் பணியாளர்களின் இமாம் என்று வாதம் செய்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த அளவுக்கு எழுதினார்கள் என்றால், ஆங்கிலேய நாட்டின் மன்னர் கூட என்னைப் பின்பற்ற வேண்டும் என்று வாதித்தார்கள். அதற்காக தாமே ஒரு கடிதம் எழுதி அங்கு அப்போதிருந்த ராணிக்கு அனுப்பி வைத்தார்கள். இதற்கு எதிரில் துப்புரவுப் பணி செய்பவர்களின் இமாம் என்று வாதித்தவரின் துணிச்சல் எவ்வாறு இருந்தது எனில், அவரது ஜமாஅத்தின் நிலை எவ்வாறு இருந்தது எனில் இங்கு வந்து போலீஸ் அவரிடம், நீர் ஏதாவது வாதம் செய்தீரா என்று கேட்டபோது நான் எந்த வாதமும் செய்யவில்லை. எவராவது பொய்யாக அறிக்கை தந்திருப்பார்கள் என்று கூறினார். ஆக, இணையாக வருபவர்களிடம் இருந்தே எல்லாவற்றிற்கும் முதலில் எதிர்ப்பு ஏற்படுகிறது. உறவினர்களிடம் செய்தி போய் சேரும்போது அவர்களே பெரும் எதிர்ப்பு காட்டுவார்கள். பிறகு ஒவ்வோர் அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்படாத வழிகளில் நஷ்டம் ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

இதனைக் குறிப்பிட்ட பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ஏராளமான உறவினர்கள் அஹ்மதிய்யத்தின் காரணமாக துண்டிக்கப்பட்டுப் போயினர். காரணம், நாம் அவர்களை சந்திக்க விரும்பவில்லை என்பதல்ல. மாறாக, அவர்கள் நம்மை சந்திக்க விரும்பவில்லை என்பதால்தான். எமக்கு அந்த உறவினர்களிடமிருந்து ஏச்சுக்களே கிடைத்தன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிற்காலத்தில் அஹ்மதியாகி விட்ட எமது பெரியம்மா எம்மை தவறாகப் பேசி வந்தார்கள். எனக்கு நினைவுண்டு. எனது வயது அப்போது 6–7 இருக்கும். நான் மாடிப்படியில் ஏறிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்த்து அவர்கள் மீண்டும் மீண்டும் கூறினார்கள். ஜியோ ஜியோ கஹா(ன்) ஓஜி கோகோ இந்த பஞ்சாபி சொல்லை அவர்கள் எத்தனை முறை கூறினார்கள் என்றால் அது எனக்கு மனப்பாடமாகி விட்டது. நான் வீட்டிற்குச் சென்று கூறி இதற்கு என்ன பொருள் என்று கேட்டபோது, உனது தந்தையார் எப்படி கெட்டவரோ அதனைப் போன்றே மகனும் கெட்டவர் என்று அதற்கு பொருள் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: காதியானில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பாய்காட் செய்யப்பட்டது. அவர்களது வீட்டில் வேலை செய்வதிலிருந்து மக்கள் தடுக்கப்பட்டனர். குயவர்கள் தடுக்கப்பட்டனர். துப்புரவுப் பணியாளர்கள் துப்புரவு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டனர். எனது சகோதரர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சகோதரரின் மனைவி மற்றும் பிற நெருங்கிய உறவினர், அன்னாரின் மாமாவின் மகன் அலிஷேர் போன்றோர் விதவிதமான தொல்லைகளைக் கொடுத்தனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: குஜராத்திலிருந்து சில நண்பர்கள் – ஏழு சகோதரர்கள் காதியான் வந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோட்டம் என்று கூறப்பட்டதால் ஒரு தோட்டத்திற்குச் சென்றனர். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தோட்டமாயிற்றே என்று பார்க்கச் சென்றார்கள். வழியில் எமது ஓர் உறவினர் தோட்டத்தில் ஒரு மரம் வைத்துக் கொண்டிருந்தார். அவர் இவர்களிடம் எங்கிருந்து வருகிறீர்கள்? ஏன் வருகிறீர்கள்? என்று கேட்டார். குஜராத்திலிருந்து வந்த அந்த விருந்தாளிகள் கூறினர். குஜராத்திலிருந்து வருகிறோம்; மிர்ஸா சாஹிபுக்காக வந்துள்ளோம். அவர் கூறினார்: பாருங்கள்! நான் அவரது மாமா மகன் ஆவேன். நான் அவரை நன்றாக அறிவேன். அவர் அப்படிபட்டவர், இப்படிபட்டவர்; அவர்களுள் ஒருவர், மற்றவர்கள் அனைவரையும் விட முன்னால் இருந்தவர். அவரைப் பிடித்து வைத்துக் கொண்டு பிற சகோதரர்களை சீக்கிரமாக வாருங்கள் என்று குரல்

கொடுத்தார். இதனால் அம்மனிதர் பயந்து விட்டார். அந்த அஹ்மதி, நான் உம்மை அடிக்கப் போவதில்லை. ஏனெனில், நீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உறவினர் ஆவீர். நான் எனது சகோதரருக்கு உனது தோற்றத்தைக் காட்ட விரும்பினேன். ஏனெனில் நாங்கள், ஷய்த்தான் கண்ணுக்குத் தெரிய மாட்டான் என்றுதான் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால், இன்று அவன் எப்படியிருப்பான் என்று பார்த்து விட்டேன் என்று கூறினார்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, உம்மைத் தவிர உமது குடும்பத்தின் பிற தலைமுறைகள் துண்டிக்கப்பட்டு விடுவர் என்று அறிவிக்கப்பட்டது. எதிர்ப்புகள் ஏற்பட்டன; எல்லாம் நடந்தன. ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, ‘‘தலைமுறைகள் உம்மிடமிருந்தே தொடரும்; உனக்கு முன் இருந்தவை துண்டிக்கப்பட்டு விடும்’’ என்று ஆறுதல் அளித்தான். அவ்வாறே நடந்தது. அஹ்மதிய்யா இயக்கத்தில் நுழைந்தவர் மட்டுமே எஞ்சினர். பிற அனைவரின் சந்ததிகளும் துண்டிக்கப்பட்டுப் போயினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அக்குடும்பத்தில் கிட்டதட்ட 70 ஆண்கள் இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பௌதீக மற்றும் ஆன்மீக சந்ததிகளைத் தவிர மற்றவர்களில் ஒருவருக்குக் கூட சந்ததியில்லை. ஆனால் அவர்களோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பெயரை அழிப்பதற்கு எந்த அளவுக்கு ஒருங்கிணைந்து முயன்றார்கள் என்றால், தமது தரப்பில் எல்லா அழுத்தமும் தந்து விட்டார்கள். விளைவு என்ன? அவர்கள் தாமே அழிந்தனர். அவர்களது சந்ததிகள்தான் துண்டிக்கப்பட்டுப் போயினர். இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையின் மகத்தான அடையாளம் ஆகும்.

பிறகு பெரியம்மாவின் பைஅத் சம்பவத்தை விளக்கியவாறு கூறினார்கள்: சில முன்னறிவிப்புகளும் அடையாளங்களும் வெளிப்படையில் சிறியவையாகத் தோன்றினாலும் அவற்றின் தரத்தை ஆய்வு செய்பவருக்கு அதனால் அவர்களின் ஈமான் அதிகரிக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் இல்ஹாமாவது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நேற்றுதான் அது எனக்கே தெரியும். அது தனிப்பட்டதாகவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் இருந்தாலும் கூட அதில் பல முன்னறிவிப்புகள் உள்ளன. பல நண்பர்கள் தமக்கு முன்னரே தெரியும் என்று கூறினாலும் எனக்கு அந்த இல்ஹாம் நேற்று தான் தெரிய வந்தது.

நேற்று பெரியம்மா வஃபாத் ஆகும்போது ஷேக் யாகூப் அலி சாஹிப் கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு பழைய கால இல்ஹாம் ஒன்று உண்டு. அது ‘தாயி ஆயீ – பெரியம்மா வந்தார்’ என்பதாகும். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய பெரியம்மாவாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அண்ணன் மனைவியாவார்கள். ஆக, தாயி ஆயீ என்பது ஒரு பழைய இல்ஹாம் ஆக இருந்தது. பழைய அஹ்மதிகள், இதன் பொருள் என்னவென்று தெரியவில்லை என்று கூறினர். ஒருவர் ஒரு விதமாகவும் இன்னொருவர் இன்னொரு விதமாகவும் கூறினர். ஆனால் நேரடியாக ஒரு பொருள் இவ்வாறே இருக்க முடியும். ஒருவருக்கு பெரியம்மா உறவு கொண்ட ஒரு பெண் வர வேண்டும் என்பதேயாகும். வருதல் என்பதற்கு இருவகை புரிதல்கள் உண்டு. அருகில் வருதல், ஜமாஅத்திற்கு வருதல்; வெறுமனே வருவது முன்னறிவிப்பாக இருக்க முடியாது. ஏனெனில் உறவினர்கள் வரவே செய்வர். எங்களுடைய எல்லா பெரிய மனிதர்களும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அண்ணனின் மனைவியை பெரியம்மா என்றே அழைத்தனர். அவர்களின் பெயரே தாயீ (பெரியம்மா) என்பதுபோன்று இருந்தது.

இயக்கத்தின் நூல்களைப் படித்தவர்கள் அறிவர். முஹம்மதி பேகம் உடைய முன்னறிவிப்பின் காலத்தில் இந்த பெரியம்மா மிகவும் கடுமையான எதிரியாக இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் குடும்பத்தில் எல்லாரையும் விட மூத்தவராக இருந்ததாலும், முன்னறிவிப்பும் அவரது சகோதரியின் மகள் குறித்ததாக இருந்ததாலும் குடும்பத்தின் தலைவி என்ற முறையில் குடும்பத்திற்கு இழிவைத் தருவதற்குச் சமமானதாக அவர் கருதிய ஒரு சம்பந்தத்தை தடை செய்வது தனது கடமை என்று அவர்கள் கருதினர். இதனை எதிர்ப்பது அவரைப் பொருத்தவரை மிக முக்கியமான கடமையாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பெண்களின் இயல்பிற்கு ஏற்ப மூத்த பெண்களுக்கு குடும்பத்தில் மரியாதை தர வேண்டும் என்பது மார்க்க விவகாரங்கள் இன்னும் சொல்வதாயின், அரசியல் விவகாரங்கள் எல்லாவற்றையும் விட முக்கியமானவையாக இருந்தன. அந்த நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ‘மஸீஹ் மவ்வூது’ என்ற வாதம் பெரியம்மா அவர்களின் பார்வையில் குடும்பத்தின் கண்ணியத்தை விட அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இன்னொரு வகையில் பெரியவர்களுக்கு, தமது சிறியவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது சிரமமாகவும் இருக்கிறது. மஸீஹ் மவ்வூது பெரியம்மா அவர்களை விட சிறியவர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சொத்தில் எந்த பங்கையும் வாங்கவும் இல்லை. எனவே அன்னாருக்கு பெரியம்மாவின் வீட்டில் இருந்துதான் உணவுகள் சென்றன. இந்த அடிப்படையில் பெரியம்மா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, தான் பெரிய உபகாரியாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். பெண்களின் உணர்வில் இயல்பாகவே அவ்வாறு நினைக்கும் பண்பு உள்ளது. எனவே நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொத்தின் பங்கும் நம் வசம் கிடைத்துள்ளது என்று நினைக்காமல் நான் அவர்களுக்கு உணவளிக்கிறேன்; உணவு அனுப்புகிறேன்; அவரது செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்று கருதியவாறு தன்னை பெரும் உபகாரியாக கருதினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஓர் அரபிக் கவிதையில் கூறினார்கள்: لُفَاظَاتُ الْمَوَائِدِ كَانَ أُكُلِيْ وَصِرْتُ الْيَوْمَ مِطْعَامَ الْأَهَالِيْ

இதன் பொருள்: ஒரு காலம் இருந்தது. பிறரின் ரொட்டித் துண்டுகளில் என் காலத்தை கழித்தேன். ஆனால் இப்போது இறைவன் எனக்கு எத்தகைய மகிமையை வழங்கியுள்ளான் என்றால் ஆயிரக்கணக்கானோர் இன்று எனது உணவு விரிப்பிலிருந்து உண்கின்றனர். இந்த உண்கின்றனர் என்பதிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொத்துக்கள் தனியாக அவர்களிடம் இருக்கவில்லை. சகோதரரின் பொறுப்பில்தான் இருந்தன என்ற கருத்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றை நாம்தான் அனுபவிக்கின்றோம் என்ற உணர்வும் அவர்களுக்கு இருக்கவில்லை. இந்த வகையில் அன்னாரின் தந்தையாரும் கூறி வந்தார்கள்: ‘இவரின் சொத்துக்களைப் பராமரிக்க இவரால் முடியாது.’ பெரியம்மாவின் உள்ளத்து நிலையை பொருத்தவரை ஈமான் கொள்வது மிகவும் சிரமமான விஷயமாகும். இவர்கள் பின்னாளில் ஈமான் கொண்டார்கள்.

ஆக, மார்க்கக் கோணத்தில் ஆதாரம் இல்லை. மாறாக, குடும்ப ரீதியில் ஆதாரமாகும். குடும்பப் பின்னணிதான் விளக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இரு தரப்புக்கும் உள்ள தகுதிகளில் எஜமானருக்கும் பணியாளருக்கும் இடையில் உள்ள நிலையாகும். அதாவது பெரியம்மா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தமது பணியாளாக (நவூதுபில்லாஹ்) கருதினார்கள். அன்னாரை ஓர் ஏழை மனிதன் என்று கருதினார்கள். ஒரு பணியும் செய்வதில்லை. நமது ரொட்டித் துண்டுகளின் மூலம் பராமரிக்கப்படுவர் என்று கருதினார். இந்த நிலையில் அத்தகைய மனிதர் தமது சகோதரியின் மகளை திருமணம் செய்வதை அவர்களால் சகிக்க முடியவில்லை. அவர்களின் எல்லாரிலும் மூத்தவராக இருந்ததால் எல்லாரையும் விட அதிகமாக அதை அவர்கள் எதிர்க்கவும் செய்தார்கள். அக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிர்ப்பு மிகவும் அதிகமாக இருந்தது. உறவினர்கள் அவர்களை சந்திப்பதை விட்டு விட்டார்கள். அவர்களும் அந்த உறவினர்களை சந்திப்பதில்லை. மாறாக, குடும்பத்தினரின் எதிர்ப்பு எந்த அளவுக்கு இருந்தது என்றால் இதைப் பற்றி எனது தாயார் (ஹஸ்ரத் அம்மாஜான்) கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் சாஹிபின் தாய்வழிப்பாட்டியின் வீட்டில் ஒரு மூதாட்டி இருந்தார்கள். அவர் மிகவும் அழுதவாறு சிராக் பீபியின் மகனை எம்மை பார்க்கக் கூட விடுவதில்லேயே? என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஒரு திருடர், கொள்ளையரைப் போன்று தனிமைப்படுத்தி வைத்தார்கள். இவர் நமது குடும்பத்தின் பெருமையைக் குலைப்பவர் என்று கருதப்பட்டார்கள். இந்நிலையில் பெரியம்மா அஹ்மதியாகி விடுவார் என்று சிந்திப்பது அசாதாரணமான விஷயமாகும். மனித உள்ளம் மாற முடியும். ஆனால் பார்க்க வேண்டிய விஷயமாவது சூழ்நிலை என்ன கூறுகிறது? எந்த சூழ்நிலையில் இந்த இல்ஹாம் இறங்கியது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பெரியம்மா வந்தார் என்று இல்ஹாம் வந்தது. பெரியம்மா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அண்ணன் மனைவியாவார். இந்த இல்ஹாமில் இருந்து தெரியவருவதாவது, பெரியம்மா எப்போது பைஅத் செய்வார்கள் எனில் பைஅத் வாங்குபவருக்கு அவர் பெரியம்மா உறவில் இருப்பார். பெரியம்மா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வார்கள் என்றிருந்திருக்கும் என்றால் இல்ஹாம் ‘அண்ணனின் மனைவி வந்தார்’ என்று வந்திருக்கும். ஏனெனில் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அண்ணன் மனைவியாவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தில் இருந்து ஒரு பெண் வந்தார். ஆனால் பெரியம்மா என்ற சொல் வெளிப்படுத்துவதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகன் கலீஃபாவாகும்போது அவரது கையில் இவர் பைஅத் செய்வார் என்பதாகும். ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகன் கலீஃபாவாக ஆக முடியாது என்றால் பெரியம்மா என்ற சொல் வீணானதாக இருந்தது.

அன்னார் கூறுகிறார்கள்: உண்மையில் இந்த முன்னறிவிப்பில் 3 முன்னறிவிப்புகள் உள்ளன. முதலாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்ததிகளிலிருந்து கலீஃபா இருப்பார். இரண்டாவது, அப்போது பெரியம்மா பைஅத்தில் இணைவார். மூன்றாவது, பெரியம்மாவின் வயதைக் குறித்து ஒரு முன்னறிவிப்பாகும். அது இவ்வாறாகும். 70 வயது கொண்ட ஒரு மூதாட்டியைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னறிவிப்பு செய்கிறார்கள். அப்போதே அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட வயதில் பெரியவர். அவர் பின்னாளில் உயிருடன் இருப்பார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சந்ததிகளிலிருந்து கலீஃபா வருவார்கள். அவரிடம் பைஅத்தில் இணைவார்கள். இத்தகைய நீண்ட வயதுடையவரை சந்திப்பது மிகவும் பெரிய விஷயமாகும். மனித மூளையால் ஓர் இளைஞரைக் கூட இவர் இவ்வளவு காலம் உயிருடன் இருப்பார் என்று கூற முடியாது. பெரியம்மா வஃபாத் ஆனது அநேகமாக 1927 –ல் இருக்கும். இந்த வகையில் ஒரு

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 19 January 2017 Issue No. 3

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

மூதாட்டியைப் பற்றி கூறப்படுவது மிகப்பெரும் அடையாளமாகும். அவர்கள் பைஅத் செய்வதும் என்னுடைய காலத்தில் பைஅத் செய்வதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகன்களுள் ஒருவர் கலீஃபாவாவது என பல முன்னறிவிப்புகள் இரண்டே சொற்களில் விளக்கப்பட்டுள்ளன.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: பெரியம்மா பைஅத் செய்த பிறகு வஸிய்யத்தும் செய்தார். அதற்கும் கூட வியத்தகு பின்னணி உள்ளது. கூறுகிறார்கள்: நான் கருதுகிறேன். பழைய குடும்பங்களில் எத்தகைய வழக்கங்கள் காணப்படுகின்றன என்றால் அதன் அடிப்படையில் பெரியம்மா பைஅத் செய்தது ஓர் அசாதாரணமான மாற்றமேயாகும். பைஅத் மட்டும் செய்யவில்லை. வஸியத்தும் செய்து விட்டார்கள். முதலில் கடும் எதிர்ப்பு காட்டிய அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை குடும்பத்தினரின் கபருஸ்தானுக்குப் பதில் வேறு இடத்தில் அடக்க வேண்டாம் என்று கூறினார்கள். இதனை அப்போது கூறி அனுப்பவும் செய்தார்கள். அன்னாரை குடும்ப கபருஸ்தானை விட்டு விட்டு வேறு கபருஸ்தானில் அடக்கக் கூடாது என்று சொல்லி அனுப்பினார்கள். ஏனெனில் அது ஓர் இழிவுபடுத்துதல் ஆகும் என்று அவர்கள் கருதினார்கள். அதற்குப் பிறகும் பல வருடங்கள் ஆட்சேபணை செய்பவராகவே இருந்தார்கள். ஆனால் பிறகு அவர்களிடம் எந்த நிலை ஏற்பட்டது என்றால், தானே வஸிய்யத் செய்தார்கள். பெஹஷ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டார்கள். சிந்தனையுள்ள மனிதனுக்கு இதில் பெரிய அடையாளம் உள்ளது. வெளிப்படையில் இது சாதாரண விஷயமாகும். ஒரு மனிதரைப் பற்றியது. ஆனால் இதில் உண்மையின் பல அம்சங்கள் உள்ளன. கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அவர்கள் குடும்ப கபருஸ்தானில் அடக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் வஸிய்யத் செய்தார்கள். பிறகு தாமும் கூட பெஹஷ்தி மக்பராவில் அடக்கப்பட்டார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தில்லி பயண சம்பவத்தைக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் இறைவனை நம்பி நிற்கும்போது இறைவனின் பணிகளைப் பற்றி அதற்கு ஒரு விளைவு ஏற்படாது என்று நினைக்கவே முடியாது. அல்லாஹ்வை நம்பி நிற்கும்போது கண்டிப்பாக இறைவன் அதற்கு நல் விளைவை வெளிப்படுத்துவான். அன்னார் கூறுகிறார்கள்: நான் சிறுவனாக இருந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தில்லி சென்றார்கள். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தில்லி ஜமாஅத்துக்கு சொற்பொழிவாற்றுகிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் சிறுவனாக இருந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தில்லி வந்தார்கள். இங்குள்ள அவ்லியாவின் அடக்கஸ்தலங்களுக்குச் சென்றார்கள். அதிக நேரம் வரை நீண்ட துஆக்களைச் செய்தார்கள். கூறினார்கள்: நான் இங்கு துஆ செய்வதற்கான காரணம் இந்த பெரியவர்களின் ஆன்மாக்கள் எழுச்சி அடைய வேண்டும். இவர்களின் சந்ததிகள் இந்த ஒளியை உணர முடியாமல் போய்விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தேன்.

இக்காலத்தில் அல்லாஹ் அவர்களை நேர்வழிக்காக அனுப்பினான். நிச்சயமாக ஒரு காலம் வரும். அல்லாஹ் இம்மக்களின் உள்ளங்களைத் திறப்பான். இவர்கள் உண்மையை ஒப்புக் கொள்வார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் அப்போது சிறுவனாக இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அக்கூற்று இதுவரை என் உள்ளத்தில் எஞ்சியுள்ளது. உங்களது ஜமாஅத் அந்த முயற்சியின் நல் விளைவைக் காண விரும்பினால் அவர்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். நிச்சயமாக ஒரு நாள் அவ்வாறு வரும். ஒரு விஷயத்தை அல்லாஹ் நிலைநாட்ட விரும்பும்போது அது நிலைபெற்றே தீரும்.

அன்னார் தில்லி ஜமாஅத்தைக் குறித்து இதனைக் கூறினார்கள். இன்றும் கூட தில்லி ஜமாஅத்தின் கடமையாவது ஞானத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியை சென்று சேருங்கள். கண்காட்சி போன்றவை மூலம் ஜமாஅத்தின் தப்லீக் பணியில் ஒரு வேகம் ஏற்பட்டுள்ளது – மாஷாஅல்லாஹ். ஆனால் முஸ்லிம்களின் தரப்பிலிருந்து எதிர்ப்பு உள்ளது. எனவே அவர்களுக்கும் இந்த தூதுச்செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

இவை அனைத்திற்குப் பிறகு மிகவும் முக்கியமான விஷயம் துஆவாகும். இதன் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. பிறகு இதனைத் தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு கனவை குறிப்பிடுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் ஆன்மீகக் காட்சியில் பார்த்தார்கள். ஒரு கால்வாய் நீண்ட தூரத்திற்கு தோண்டப்பட்டுள்ளது. அதன் மேல் ஆடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆட்டிற்கும் அருகில் கையில் கத்தியுடன் ஒரு கசாப்புக்காரன் நிற்கிறான். அவர்கள் அனைவரும் கட்டளையை எதிர்பார்த்து நிற்பது போன்று வானத்தைப் பார்த்து நிற்கிறார்கள். நான் அந்த இடத்திற்குச் செல்கிறேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். அவர்களின் அருகில் சென்று குல் மா யஃபவு பிகும் ரப்பி லவ்லா துஆக்கும் என்று கூறுகிறேன். உடனே அனைவரும் கத்தியைக் கொண்டு அறுக்கிறார்கள். ஒருவர் கவனம் செலுத்தவில்லை எனில் இறைவன் ஏன் பொருட்படுத்தப் போகிறான்? அவனது பணியைத் தடுக்க முடியாது; நடந்தே தீரும்.

அன்னார் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றி முன்னூறு வருடங்களுக்குப் பிறகு கிறித்தவத்திற்கு முன்னேற்றம் கிடைத்தது. ஆனால் நமது நிலைமைகளைப் பார்த்தால் முஹம்மதிய மஸீஹின் காலத்திற்கு மிகவும் குறைந்த காலத்தில் அஹ்மதிய்யத்திற்க முன்னேற்றம் கிடைத்து விடும் – இன்ஷா அல்லாஹ் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் மவ்லவிகளோ, பிற மார்க்கத் தலைவர்களோ அல்லது வேற உலகியல் சக்திகளோ அல்லாஹ்வின் பார்வையில் அவர்கள் ஒரு பொருட்டே அல்ல. வெறும் ஆடுகளைப் போன்றவர்கள். இவர்கள் ஒருபோதும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை தடுக்க இயலாது. ஆனால் அதற்காக நாம் தப்லீக் செய்யட்டும்; மேலும் பரப்பட்டும் என்று நமது முபல்லிக்குகளை மட்டும் நாம் சார்ந்து நிற்க இயலாது. இந்த வளர்ச்சியில் நாம் பங்கு பெற வேண்டுமானால் நாம் பங்கு பெறவும் வேண்டும். நாமும் கூட துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தமது ஆன்மீகத்தை அதிகரிக்க வேண்டும். நமது இறைத் தொடர்பை அதிகரிக்க வேண்டும்; உருவாக்க வேண்டும். இவை தான் அஹ்மதிய்யத்திற்கு இருந்து வரும் எதிர்ப்பை அழிப்பவையாகும். அஹ்மதிய்யதின் வளர்ச்சியிலும் நம்மை பங்குதாரர்களாக்குபவையாகும் – இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு இந்த அந்தஸ்தை வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். அது கண்ணியத்திற்குரிய ஸூப்னி ஸஃபர் அஹ்மது என்ற இந்தோனேஷியா முபல்லிக் சாஹிப் உடையதாகும். இவர் 8 நவம்பர் அன்று மாரடைப்பின் காரணமாக வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இவருக்கு 71 வயது. 18 ஆகஸ்ட் 1945 –ல் பட்டாங் சுமத்ராவில் பிறந்தார். இவரது தந்தையார் தெஹ்னி திலான் சாஹிப் 1923 –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கையில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். அவர் இன்னும் இரு இளைஞர்களுடன் சேர்ந்து சுமத்ரா மற்றும் ஜாவாவில் தப்லீக் மையங்களை நிறுவினார். இவ்வாறு இந்தோனேஷியாவின் முன்னோடியாக இருந்த முபல்லிக்குகளில் இவர்களும் அடங்கியுள்ளார்கள். இவர்கள் வக்ஃப் செய்தார்கள். பிறகு தந்தையார் இவருக்கு கல்வி கற்பிப்பதற்காக இவரை ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கு அனுப்பினார்கள். ஸூப்னி ஸஃபர் சாஹிப் 17 ஜூலை 1963 –ல் ரப்வா புறப்பட்டார்கள். கிட்டத்தட்ட 11 வருடங்கள் ரப்வாவில் இருந்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி கற்றார்கள். 1974 –ல் ஜாமிஆவிலிருந்து வெளியேறி இந்தோனேஷியா திரும்பினார்கள். அங்கு அவருக்கு முதல் போஸ்டிங் கலிமத்தானில் இருந்தது. பிறகு மேற்கு ஜாவாவில் மண்டல முபல்லிக்காவும் மண்டல அமீராகவும் பணியாற்றினார். பிறகு கிழக்கு ஜாவாவிலும் பப்புவாவிலும் பணியாற்றினார். 1985–87 வரை ஜாம்பியிலம், 1987–91 வரை வடக்கு சுமத்ராவிலும் மண்டல முபல்லிக்காக தொண்டு செய்தார். 1991–97 வரை இந்தோனேஷியா ஜாமிஆ அஹ்மதிய்யாவிலும் பிக்ஹின் ஆசிரியராக கற்பிக்கும் வாய்ப்பு பெற்றார். இதே காலத்தில் புதிதாக பைஅத் செய்தவருக்கு தர்பிய்யத் கொடுக்கும் துறையின் இன்சார்ஜ் ஆகவும் நியமிக்கப்பட்டார். 1997–2001 வரை லக்போங்கில் மண்டல முபல்லிக் ஆக நியமிக்கப்பட்டார். இந்தோனேஷியாவில் அவர் மூலமாக பல்வேறு பகுதிகளில் பல ஜமாஅத்துகள் நிறுவப்பட்டன. சில பள்ளிவாயில்களும், மிஷன் ஹவுஸ்களும் வந்தன. இந்தோனேஷியாவின் மொழியில் 4 நூல்கள் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. ஸக்காத்தின் தத்துவம், இறை வழியில் தியாகம், ஜனாஸா, இஸ்லாத்தில் ஜிஹாதின் பொருள் என்ற நான்கு நூல்களை எழுதினார். 2001 –ல் ஓய்வு பெற்றார். சில காலமாக பல நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தார். கிலாஃபத்துடன் முழுமையான பற்றும் விசுவாசமும் இருந்தது. ஆழமான கீழ்படிதலின் தொடர்பு இருந்தது. மிகவும் களங்கமற்ற அர்ப்பணிப்புள்ள மார்க்கத் தொண்டராக இருந்தார். இவரது நினைவாக மனைவி மற்றும் ஒரு மகள் இரு மகன்கள் உள்ளனர். அல்லாஹ் அனைவரையும் அஹ்மதிய்யத்தில் நிலைநாட்டுவானாக! இவர்கள் தமது தந்தையைப் போன்று நன்மையில் வளரவும், விசுசாசத்தை வெளிப்படுத்தவும் வாய்ப்பு பெறுவார்களாக! செயலளவில் அஹ்மதிகளாவார்களாக!

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad